5


# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு


**உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி, முன்னேற்றமடைந்த நிதியியல் சந்தை நிலைமைகள் மற்றும் உறுதியான பேரண்டப் பொருளாதாரச் சூழலால் கொண்டு வரப்பட்ட முன்னேற்றமடைந்த முதலீட்டாளர் நம்பிக்கை என்பனவற்றின் பக்கபலத்துடன் 2010இல் வெளிநாட்டுத்துறை தொடர்ந்து செழிப்பாக விளங்கியது.** வெளிநாட்டு வர்த்தகம் 2009இல் அவதானிக்கப்பட்ட கூர்மையான சுருக்கத்தை நேர்மாறாக்கி 2010இல் உறுதியாக மீட்சியடைந்தது. உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சி, கவர்ச்சியான விலைகள், மீள் காப்புறுதி மீதான கப்பற் போக்குவரத்து போர் இடர்நேர்வுக் காப்புறுதி கட்டுப்பணம் நீக்கப்பட்டமை என்பவற்றால் உதவப்பட்டு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் உயர்மட்டத்தை அடைந்து 2008இலான முன்னைய உச்சச் செயலாற்றத்தை விஞ்சியது. 2010 ஒகத்திலிருந்த முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + (ஜிஎஸ்பி+) சலுகைகள் மீளப் பெறப்பட்டதற்கு மத்தியிலும் உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சி காரணமாக பிரதான சேரிடங்களுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்தன. இறக்குமதிகளும் நுகர்வு மற்றும் இடைநிலைப் பொருட்களிலிருந்தான பங்களிப்புக்களுடன் வலுவாக மீட்சியடைந்து தீர்வைக் குறைப்பு, உயர்ந்த பண்ட விலைகள் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் வலுவான வளர்ச்சி என்பனவற்றைப் பிரதிபலித்தது. திரண்ட வர்த்தகப் பற்றாக்குறை 2010இல் விரிவடைந்தமைக்கு உள்நாட்டு மற்றும் உலகளாவிய கேள்வியின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை கடுமையாகச் சுருக்கமடைந்த ஆண்டான 2009இன் தளத் தாக்கமே முக்கிய காரணமாகும். எனினும், இது ஏற்றுமதி வருவாய்களைவிட இறக்குமதிச் செலவினம் விரைவாக வீழ்ச்சியடைந்த ஆண்டான 2009 தனிச் சிறப்பு வாய்ந்த ஆண்டாக இருந்தமையால் ஏற்பட்டது. தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டு நிதியிடலின் முக்கிய மூலமாகவும் தொடர்ந்து விளங்கின. நீடித்த உள்நாட்டு மோதலிலிருந்து பெருமளவில் பாதிப்புக்குள்ளான இலங்கையின் பயணம் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் 2010இல் குறிப்பிடத்தக்க மீட்சியை எடுத்துக்காட்டியது. 2010இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 10 ஆண்டுச் சராசரியான 3.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதமாக விளங்கியது.

**நிதியியல் கணக்கிற்கான அதிகரித்த உட்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவைகள் குறிப்பிடத்தக்களவு உயர் மிகையைப் பதிவு செய்வதற்கு உதவியது.** இலங்கை முன்பு பட்டியலிடப்பட்ட வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கை தகுதி பெறும் நாடுகளின் வகையிலிருந்து 2010 சனவரியில் பன்னாட்டு நாணய நிதியத்தால் நடுத்தர வருமானம்

வரைபடம் 5.1 சென்மதி நிலுவை




வரைபடம் 5.2 வெளிநாட்டு செலாவணி வருவாய்களின் முக்கிய மூலங்கள்




பெறும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரம் என்ற அந்தஸ்துக்கு தகுதி பெற்றமை நாட்டை பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் உறுதியாக எறிவு செய்வதற்கு இயலச் செய்தது. பன்னாட்டு நாணய நிதிய துணைநில் ஒழுங்குகள் தொடர்ந்து கிடைத்தமை ஏற்கனவேயுள்ள சாதகமான முதலீட்டாளர் மனோபாவத்தை பெருமளவிற்கு பலப்படுத்த உதவியது. இத்துடன், பன்னாட்டுத் தரமிடல் முகவர்கள் நாட்டிற்கான அவர்களின் தரமிடல்களை உயர்த்தினர். 2010 ஒத்தோபரில் வழங்கப்பட்ட மூன்றாவது நாட்டுக்கான பன்னாட்டு முறி 6 தடவைகளுக்கும் மேலதிகமாக உதவப்பட்டதுடன் முன்னைய வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் வட்டி வீதம் கணிசமானளவில் குறைவாகக் காணப்பட்டது. அரசு மற்றும் தனியார் துறைக்கான நீண்டகால மூலதனப் பாய்ச்சல்களுடன் இச் சாதகமான அபிவிருத்திகள் இணைந்தமையின் காரணமாக 2010 திசெம்பர் இறுதியில் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 921 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்திருக்கையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பெறுகைகள் நீங்கலாக) ஐ.அ.டொலர் 6,610 மில்லியனை அடைந்ததுடன் இது 5.9 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகும்.

**2010இல் செலாவணி வீதக் கொள்கை உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டைப் பேணுவதில் கவனம் செலுத்தியது.** இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களின் பின்னணியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக தொடர்ந்து படிப்படியாக பெறுமதியில் உயர்வடைந்தது. அளவுக்கதிகமான ரூபாப் பெறுமதியில் உயர்வடைவதைத் தவிர்ப்பதற்கும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்குமாக, மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்தைத் தொடர்ந்து கொள்வனவு செய்தது. எனினும், பெற்றோலியச் செலவைத் தீர்ப்பனவு செய்வதால் எழும் பாரிய வெளிப்பாய்ச்சல்களுக்கு முகம் கொடுப்பதற்கு போதுமான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு 2010 இறுதிக் காலாண்டில் மத்திய வங்கி உள்நாட்டுச் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியது.

**உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் உள்நாட்டில் முன்னேற்றமடைந்த வளர்ச்சி வாய்ப்புக்களுடன் வெளிநாட்டுத்துறை 2011இல் மேலும் பலமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** ஆரம்ப உற்பத்திகளைக் காட்டிலும் பெறுமதிகூட்டப்பட்ட மற்றும் முடிவுப் பொருட்களில் கூடிய கவனம் செலுத்துதல், ஏற்கனவே இருக்கும் பன்னாட்டு வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்தும் அதேவேளை தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் ஆழமாக நுழைதல் போன்ற ஏற்றுமதி உற்பத்திகளின் சொத்துப்பட்டியல் மற்றும் சந்தைகளை விரிவாக்கல் மற்றும் பன்முகப்படுத்தலை அடைவது தொடர்பாக பல முன்னெடுப்புக்கள் ஏற்கனவே நெறிப்படுத்தப்பட்டன. மேலும், பொருளாதாரத்துக்குக் கூடிய வெளிநாட்டுச் செலாவணியைக் கவரும் சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், எதிர்பார்க்கப்படாத பொருட்களின் விலைத் தளம்பல்கள் மற்றும் குறுகியகால நிதியியல் உட்பாய்ச்சல்களிலிருந்து ஏற்படக்கூடிய விரிவான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிலிருந்து எழும் எந்தவொரு வெளிநாட்டு அதிர்வுக்கும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையைப் பேணும் பொருட்டு முன்னெச்சரிக்கையான வழிமுறைகள் இருப்பது அவசியமாகும். இவ் வழிமுறைகள் பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் படிப்படியான முன்னேற்றங்களின் பின்னணியில் குறிப்பாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் படுகடன்களை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்கள் உள்ளிட்ட நீண்டகால மூலதனப் பாய்ச்சல்களைக் கவர்வதில் கவனம் செலுத்துகின்றன. இம் முடிவை அடைவதில், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகளின் முக்கிய தளர்த்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட அண்மைய நகர்வுகள் நிதியியல் கட்டுப்பாடற்ற தன்மையை முன்னேற்ற உதவுவதன் மூலம் தனியார் துறைக்கான கூடிய நிதியிடல் மற்றும் முதலீடுகளைக் கவர்வதற்கும் பொருளாதாரத்தின் பொதுவான போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கும் உதவும்.

அட்டவணை 5.1

## சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா. மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (ஆ) | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (ஆ) |
| **வர்த்தக நிலுவை** | **-3,370** | **-3,657** | **-5,981** | **-3,122** | **-5,205** | **-350,110** | **-404,703** | **-647,207** | **-358,707** | **-588,867** |
| ஏற்றுமதி | 6,883 | 7,640 | 8,111 | 7,085 | 8,307 | 716,579 | 845,683 | 878,499 | 813,911 | 937,737 |
| இறக்குமதி | 10,253 | 11,296 | 14,091 | 10,207 | 13,512 | 1,066,689 | 1,250,386 | 1,525,705 | 1,172,618 | 1,526,604 |
| பணிகள் (தேறிய) | 257 | 302 | 401 | 391 | 698 | 26,660 | 33,357 | 43,557 | 44,780 | 78,760 |
| பெறுகைகள் | 1,625 | 1,775 | 2,004 | 1,892 | 2,468 | 168,802 | 196,249 | 217,180 | 217,378 | 278,959 |
| கொடுப்பனவுகள் | 1,368 | 1,472 | 1,603 | 1,501 | 1,770 | 142,142 | 162,892 | 173,623 | 172,598 | 200,199 |
| வருமானம் (தேறிய) | -389 | -358 | -972 | -488 | -572 | -40,424 | -39,054 | -105,032 | -55,814 | -64,650 |
| பெறுகைகள் | 311 | 449 | -32 | 116 | 323 | 32,457 | 50,213 | -3,133 | 13,551 | 36,508 |
| கொடுப்பணவுகள் | 700 | 807 | 940 | 603 | 895 | 72,881 | 89,267 | 101,899 | 69,365 | 101,158 |
| **பொருட்கள், பணிகள் மற்றும் வருமானம் (தேறிய)** | **-3,503** | **-3,712** | **-6,552** | **-3,219** | **-5,079** | **-363,874** | **-410,401** | **-708,681** | **-369,740** | **-574,757** |
| **நடைமுறை மாற்றல்கள் (தேறிய)** | **2,004** | **2,311** | **2,666** | **3,005** | **3,660** | **208,385** | **255,684** | **288,639** | **345,498** | **413,885** |
| தனியார் மாற்றல்கள், தேறிய | 1,904 | 2,214 | 2,565 | 2,927 | 3,608 | 197,861 | 245,006 | 277,711 | 336,578 | 407,967 |
| பெறுகைகள் | 2,161 | 2,502 | 2,918 | 3,330 | 4,116 | 224,678 | 276,814 | 316,091 | 382,818 | 465,166 |
| கொடுப்பனவுகள் | 257 | 288 | 353 | 403 | 508 | 26,817 | 31,808 | 38,380 | 46,240 | 57,199 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 101 | 97 | 101 | 77 | 52 | 10,524 | 10,677 | 10,928 | 8,920 | 5,918 |
| **நடைமுறை கணக்கு** | **-1,499** | **-1,402** | **-3,886** | **-214** | **-1,418** | **-155,489** | **-154,717** | **-420,042** | **-24,242** | **-160,872** |
| **மூலதன மற்றும் நிதியியல் கணக்குகள்** | **1,808** | **2,097** | **1,773** | **2,594** | **2,876** | **190,768** | **230,978** | **193,713** | **299,381** | **322,022** |
| **மூலதனக்கணக்கு** | **291** | **269** | **291** | **233** | **164** | **30,292** | **29,669** | **31,456** | **26,832** | **18,521** |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 291 | 269 | 291 | 233 | 164 | 30,292 | 29,669 | 31,456 | 26,832 | 18,521 |
| பெறுகைகள் | 299 | 278 | 303 | 247 | 182 | 31,171 | 30,735 | 32,774 | 28,465 | 20,599 |
| கொடுப்பனவுகள் | 8 | 10 | 12 | 14 | 19 | 879 | 1,066 | 1,319 | 1,633 | 2,078 |
| **நிதியியல் கணக்கு** | **1,517** | **1,828** | **1,483** | **2,361** | **2,713** | **160,477** | **201,309** | **162,258** | **272,550** | **303,501** |
| நீண்டகாலம்: | 907 | 1,251 | 1,016 | 1,304 | 2,379 | 95,089 | 140,054 | 109,174 | 149,772 | 268,214 |
| நேரடி முதலீடு | 451 | 548 | 691 | 384 | 435 | 46,985 | 60,768 | 74,837 | 44,112 | 49,008 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு | 451 | 548 | 691 | 384 | 435 | 46,985 | 60,768 | 74,837 | 44,112 | 49,008 |
| தனியார் நீண்டகால (தேறிய) | -35 | 31 | 74 | 79 | 149 | -3,590 | 3,314 | 7,768 | 9,105 | 17,555 |
| உட்பாய்ச்சல்கள் | 139 | 199 | 265 | 390 | 580 | 14,469 | 22,033 | 28,693 | 44,795 | 65,934 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 174 | 168 | 191 | 311 | 431 | 18,058 | 18,719 | 20,925 | 35,691 | 48,379 |
| அரச, நீண்ட காலம் (தேறிய) | 491 | 672 | 252 | 840 | 1,796 | 51,694 | 75,971 | 26,568 | 96,555 | 201,650 |
| உட்பாய்ச்சல்கள் | 932 | 1,290 | 1,059 | 1,780 | 2,460 | 97,690 | 144,146 | 114,658 | 204,435 | 276,582 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 441 | 618 | 807 | 940 | 665 | 45,996 | 68,175 | 88,090 | 107,880 | 74,932 |
| குறுங்காலம்: | 610 | 577 | 466 | 1,058 | 334 | 65,387 | 61,256 | 53,084 | 122,777 | 35,287 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் (தேறிய) | 51 | 101 | 60 | -6 | -230 | 5,377 | 11,249 | 6,460 | -785 | -26,010 |
| தனியார் குறுங்காலம் (தேறிய) | -30 | 20 | 594 | 228 | -1,032 | -3,066 | 1,868 | 63,987 | 26,108 | -116,655 |
| வர்த்தக வங்கி சொத்துக்கள் (தேறிய) | 297 | -281 | 210 | -435 | 249 | 23,789 | -31,352 | 17,889 | -51,298 | 33,343 |
| வர்த்தக வங்கி பொறுப்புக்கள் (தேறிய) | 293 | 364 | -185 | -98 | 815 | 39,287 | 38,746 | -11,858 | -8,836 | 84,356 |
| அரச குறுங்காலம் (தேறிய) | - | 372 | -213 | 1,369 | 531 | - | 40,744 | -23,395 | 157,588 | 60,252 |
| சிஎஉ ஒதுக்குகள் (இ) | - | - | - | 508 | - | - | - | - | 58,353 | - |
| மதிப்பீட்டு சீர்திருத்தங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பிழைகளும் தவறுகளும் | -105 | -165 | 728 | 346 | -537 | -1,756 | -16,259 | 80,534 | 40,082 | -73,176 |
| **திரண்ட நிலுவை (ஈ)** | **204** | **531** | **-1,385** | **2,725** | **921** | **33,523** | **60,002** | **-145,795** | **315,221** | **87,974** |
| நாணய அசைவுகள் (ஈ) | -204 | -531 | 1,385 | -2,725 | -921 | -33,523 | -60,002 | 145,795 | -315,221 | -87,974 |
| **ஆண்டுச்சராசரி செலவாணி வீதம் ரூ/ஐ.அ.டொ.** | | | | | | **103.96** | **110.62** | **108.33** | **114.94** | **113.06** |
| **மொ.உ.உ இற்கான விகிதம் சதவீதங்கள் (உ)** | | | | | | | | | | |
| வர்த்தக கணக்கு | -11.9 | -11.3 | -14.7 | -7.4 | -10.5 | -11.9 | -11.3 | -14.7 | -7.4 | -10.5 |
| நடைமுறை கணக்கு | -5.3 | -4.3 | -9.5 | -0.5 | -2.9 | -5.3 | -4.3 | -9.5 | -0.5 | -2.9 |
| கொடைகளற்ற நடைமுறை கணக்கு | -5.7 | -4.6 | -9.8 | -0.7 | -3.0 | -5.7 | -4.6 | -9.8 | -0.7 | -3.0 |

(அ) இந்த வெளிப்படுத்துகை பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994 இலிருந்து கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானவை

(இ) பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்தான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் பொது மற்றும் விசேட ஒதுக்குகள்

(ஈ) ஐ.அ.டொலர் பெறுமதிகள் காலச் சராசரி செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி ரூபாய் பெறுமதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(உ) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியிலனை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## 5.2 வெளிநாட்டுத்துறைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**2010இன் வெளிநாட்டுத்துறைக் கொள்கைகள், வருவாய்கள் மற்றும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய தொழில்நிலையை அதிகரிக்கும் பொருட்டு குறிப்பாக அதன் ஏற்றுமதி உற்பத்திகளின் சொத்துப்பட்டியல் மற்றும் சந்தைகளை விரிவாக்குவதனூடாகவும் பன்முகப்படுத்துவதனூடாகவும் பெரும்பாலும் வர்த்தகத்தை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தின.** இலங்கை அதன் கொள்கை இலக்குகளை அடைவதில் உள்நாட்டுப் போட்டி மற்றும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியை இரட்டிப்பதற்கான முயற்சிகளுக்காக 2010இல் இலங்கையின் மூன்றாவது வர்த்தகக் கொள்கை மீளாய்வின் போது உலக வர்த்தக அமைப்பின் 153 நாடுகளிலிருந்து பெறப்பட்ட பாராட்டுக்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தியை நோக்கிய தொடர்ச்சியான தூண்டுதல்களைத் தொடர்ந்து அரசாங்கம் பெறுமதிகூட்டப்பட்ட மற்றும் முடிவுப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்கப்படுத்துவதற்கு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்ததுடன் வழங்கல் தடைகள் மீதான மோசமான தாக்கத்தையும் உள்நாட்டுச் சந்தை மீது பன்னாட்டுச் சந்தைகளிலான விலை அதிகரிப்புக்களையும் குறைப்பதனை உறுதிப்படுத்தியது.

அட்டவணை 5.2 சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)

சதவீதம் (%)

| விடயம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **11.2** | **12.4** | **12.6** | **19.4** | **12.6** |
| உணவும் குடிப்பானங்களும் | 10.7 | 13.5 | 14.8 | 26.8 | 12.1 |
| அரிசி | 23.4 | 3.1 | 3.1 | 5.4 | 2.1 |
| மாவு | 33.7 | 31.9 | 22.6 | 22.6 | 40.8 |
| சீனி | 1.9 | 23.9 | 32.8 | 26.5 | 4.0 |
| கோதுமையும் மெசுலினும் | 5.6 | 6.3 | 6.7 | 32.2 | 12.4 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 9.6 | 7.7 | 2.0 | 29.2 | 6.4 |
| கருவாடு | 5.0 | 2.9 | 9.4 | 10.9 | 12.2 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 7.8 | 4.9 | 8.7 | 18.3 | 25.0 |
| ஏனையவை | 24.2 | 20.8 | 24.2 | 27.2 | 19.6 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 11.7 | 11.2 | 8.4 | 6.7 | 13.3 |
| உந்து ஊர்திகளும் ஈருளிகளும் | 18.3 | 16.3 | 7.7 | 6.2 | 18.4 |
| வானொலிப் பெட்டிகளும் | 7.1 | 7.7 | 6.3 | 7.1 | 20.0 |
| இறப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் | 19.2 | 22.4 | 19.2 | 20.1 | 21.6 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.3 | 0.4 | 0.4 | 0.4 | 0.3 |
| ஏனையவை | 10.3 | 10.6 | 13.0 | 8.6 | 9.7 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **1.5** | **1.5** | **2.2** | **5.0** | **1.7** |
| வளமாக்கி | 2.5 | 2.7 | 2.5 | 2.5 | 1.0 |
| மசகெண்ணை | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலிய உற்பத்திகள் | 2.3 | 1.6 | 4.7 | 19.0 | 3.2 |
| இராசாயன கூறுகளும் கலவைகளும் | 1.8 | 1.9 | 1.8 | 1.9 | 1.1 |
| சாயமூட்டல், தோல் பதனிடல் | 2.6 | 2.5 | 2.1 | 2.1 | 2.1 |
| தாளும் தாள் மட்டையும் | 2.4 | 2.2 | 2.0 | 2.1 | 1.8 |
| புடவைகள் | 0.1 | 0.1 | 0.2 | 0.2 | 0.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 3.3 | 3.3 | 2.9 | 4.9 | 3.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **5.2** | **4.8** | **5.3** | **4.4** | **4.8** |
| கட்டடப்பொருட்கள் | 9.2 | 7.2 | 7.2 | 8.2 | 5.9 |
| போக்குவரத்து கருவிகள் | 7.0 | 7.1 | 7.1 | 3.7 | 7.6 |
| பொறிகளும் கருவிகளும் | 3.2 | 2.7 | 3.1 | 2.5 | 2.8 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 3.4 | 4.2 | 3.9 | 3.3 | 4.0 |
| **சராசரி இறக்குமதித் தீர்வை வசூலிப்பு வீதம்** | **4.3** | **4.1** | **4.6** | **7.8** | **5.0** |

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான இறக்குமதி தீர்வை சேகரிப்பு (பொ.கா.பெ).
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கைச் சுங்கம்

**2004இலிருந்து பிரதான வர்த்தகக் கொள்கைக் கருவியாக இருந்த ஐந்து பிரிவைக் கொண்ட சுங்கத் தீர்வை அமைப்பு இலகுபடுத்தப்பட்டது.** 0, 2.5, 6, 15 மற்றும் 28 சதவீதம் கொண்ட வரிப் பரிவு 2010 யூன் 1 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 0, 5, 15 மற்றும் 30 சதவீதம் கொண்ட நான்கு பிரிவு சுங்கத் தீர்வை அமைப்பிற்கு குறைக்கப்பட்டது. இம் மீளாய்வு ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகளுக்கான உற்பத்தியை அதிகரிப்பதற்கு உள்ளூர் கைத்தொழில்களுக்கு உதவும் பொதுவான கொள்கை நிலையுடன் ஒத்திசைவானதாக விளங்கியது. மூலப் பொருட்கள் மற்றும் பொறியின் இறக்குமதி மீது பெரும்பாலும் பிரயோகிக்கத்தக்கதாக இருந்த முன்னைய ஐந்து பிரிவு அமைப்பின் 2.5 சதவீத சுங்கத் தீர்வை இரத்துச் செய்யப்பட்டதுடன் இப் பொருட்கள் பூஜ்ய தீர்வைப் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் நடுவிலும் உச்ச வீதத்திலும் (5, 15, 30 சதவீதம்) வைக்கப்பட்டன. மொத்த இறக்குமதிகள் மற்றும் சுங்கத் தீர்வைகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட சராசரி இறக்குமதித் தீர்வை 2009இன் 7.8 சதவீதத்திலிருந்து 2010இல் 5.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**சாதாரண நுகர்வோர் மீது வெளிநாட்டு வழங்கல் பற்றாக்குறை காரணமாக ஏற்படும் தாக்கங்களைத் தணிப்பதற்காகவும் வர்த்தகத்தினை ஊக்குவிப்பதற்காகவும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு உதவுவதற்காகவும் இறக்குமதித் தீர்வைகள் கணிசமானளவிற்கு திருத்தப்பட்டன.** பெற்றோல், டீசல், பால் மா, சோளம், தாவர எண்ணெய், கோதுமைத் தானியம், பிரித்தெடுக்கப்பட்ட நொதியங்கள் மற்றும் பிவிசி, தோல், புடவைகள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நுகர்வு மற்றும் இடைநிலைப் பொருட்கள் மீது பிரயோகிக்கத்தக்க சுங்கத் தீர்வை மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை என்பன உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விலைத் தளம்பல்களை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்வு செய்யப்பட்டன. தங்கத்தின் இறக்குமதிகள் மீதான தீர்வைகளும் 2010 மாச்சு 1 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டன. இது முறைசார்ந்த வழிமுறைகள் ஊடாக கூடிய இறக்குமதிகளை வசதிப்படுத்துமெனவும் ஆபரணத் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதிகளை அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது செலுத்தத்தக்க சுங்கத் தீர்வை மீதான 15 சதவீத மிகைக் கட்டணம் 2010 யூன் 1இலிருந்து நீக்கப்பட்ட வேளையில் உந்து ஊர்திகள் மீதான இறக்குமதித் தீர்வைகள் 50 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன. இலங்கையைக் கவர்ச்சிகரமான பொருள் வாங்கும் சேரிடமாக முன்னேற்றுவதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தவதற்கும் செல்லிடத் தொலைபேசிகள், கைக்கடிகாரங்கள், புகைப்படக்கருவி மற்றும்

இலத்திரனியல் பொருட்கள் போன்ற பன்னாட்டு ரீதியாக வர்த்தக அடையாளமிடப்பட்ட பொருட்களுக்கான இறக்குமதித் தீர்வை 90 சதவீதத்தால் குறைக்கப்பட்டது.

**பாரம்பரிய ஆரம்ப உற்பத்திப் பொருட்களிலிருந்து கூடியளவு பெறுமதி கூட்டப்பட்ட மற்றும் முடிவுப் பொருட்களின் ஏற்றுமதியை நோக்கி நகர்வதற்கு வரவு செலவுத்திட்டம் 2011 ஆதரவளித்தது.** இதன்படி, மூலப் பொருட்கள் மற்றும் ஓரளவு பதனிடப்பட்ட பொருட்களின் அனைத்து ஏற்றுமதிகள் மீது செஸ்வரி விதிக்கப்பட்ட வேளையில் முடிவுப் பொருட்களின் ஏற்றுமதிகளுக்கு செஸ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. மேலும், உலகில் மிகத் திறமையான தொழில்நுட்பங்களை கூடியளவு இலகுவில் பெற்றுக் கொள்வதற்கு தொழில் முயற்சிகளை இயலச் செய்யும் வகையில் பொறி, கருவி மற்றும் மூலப் பொருட்கள் மீதான தீர்வைகளும் வரிகளும் குறைக்கப்பட்டன. உள்நாட்டு பெறுமதிகூட்டலில் 65 சதவீதத்தை விடக் கூடுதலாகக் கொண்டுள்ள கைத்தொழில்கள் மற்றும் இலங்கையில் ஒதுக்கப்பட்டுள்ள காப்புரிமைகளைக் கொண்டுள்ள இலங்கையின் வர்த்தக அடையாளப் பெயர்களைக் கொண்டுள்ள கைத்தொழில்களுக்கான வருமான வரி 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம், ஆடை, தோல் மற்றும் காலணி போன்ற ஏற்றுமதிக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு பல தீர்வைச் சலுகைகள் வழங்கப்பட்டன. மேலும், பொதுவாக ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான நகர்வாக அனைத்து ஏற்றுமதிக் கம்பனிகள் மீதும் பிரயோகிக்கத்தக்க வருமான வரி 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

**வர்த்தகத்தின் விரைவான வளர்ச்சிக்கு தடையாக விளங்கும் கேள்வி மற்றும் வழங்கல்பக்க பிரச்சனைகள் இரண்டினையும் மேம்படுத்துவதனை வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இலக்காகக் கொண்டிருந்தன.** ஏற்றுமதிச் செயல்முறையின் அனைத்துக் கட்டங்களையும் முன்னேற்றுதல் மற்றும் முக்கிய

அட்டவணை 5.3

### வர்த்தகச் சுட்டெண்கள் (அ)

1997=100

| வகை | 2009 | | | 2010 (ஆ) | | | வளர்ச்சி வீதம் (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு விலைச் சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு விலைச் சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு விலைச் சுட்டெண் |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **159.1** | **122.7** | **129.7** | **192.2** | **134.5** | **142.8** | **20.8** | **9.7** | **10.1** |
| தேயிலை | 164.4 | 114.8 | 143.2 | 190.8 | 127.9 | 149.1 | 16.1 | 11.4 | 4.2 |
| இறப்பர் | 125.4 | 89.0 | 140.9 | 216.6 | 83.8 | 258.4 | 72.8 | -5.8 | 83.3 |
| தெங்கு | 141.3 | 119.2 | 118.6 | 147.6 | 104.1 | 141.8 | 4.4 | -12.7 | 19.6 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 165.8 | 182.8 | 90.7 | 222.0 | 219.5 | 101.1 | 33.9 | 20.1 | 11.5 |
| **கைத்தொழில்கள் ஏற்றுமதிகள்** | **154.1** | **139.7** | **110.3** | **179.3** | **146.3** | **122.6** | **16.3** | **4.7** | **11.2** |
| புடவைகளும் ஆடைகளும் | 143.7 | 148.4 | 96.8 | 153.7 | 141.6 | 108.6 | 7.0 | -4.6 | 12.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 138.4 | 55.0 | 251.4 | 222.1 | 68.2 | 325.7 | 60.5 | 23.9 | 29.6 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 177.8 | 129.0 | 137.9 | 230.0 | 163.4 | 140.8 | 29.3 | 26.7 | 2.1 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **99.3** | **122.4** | **81.1** | **103.7** | **126.1** | **82.2** | **4.4** | **3.0** | **1.4** |
| இரத்தினக் கற்கள் | 83.0 | 111.8 | 74.2 | 84.6 | 114.7 | 73.8 | 1.9 | 2.6 | -0.6 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 314.1 | 262.1 | 119.8 | 354.4 | 276.1 | 128.4 | 12.8 | 5.3 | 7.1 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **152.4** | **135.4** | **112.5** | **178.7** | **143.2** | **124.9** | **17.3** | **5.7** | **10.9** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப்பொருட்கள்** | **158.0** | **185.2** | **85.3** | **241.1** | **223.3** | **108.0** | **52.6** | **20.6** | **26.5** |
| உணவும் குடிப்பானங்களும் | 153.8 | 140.7 | 109.3 | 215.7 | 157.3 | 137.1 | 40.3 | 11.8 | 25.5 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 164.2 | 249.7 | 65.8 | 278.0 | 319.2 | 87.1 | 69.3 | 27.8 | 32.4 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **183.2** | **133.0** | **137.8** | **239.6** | **150.2** | **159.5** | **30.8** | **13.0** | **15.8** |
| வளமாக்கி | 291.4 | 135.8 | 214.7 | 362.3 | 160.5 | 225.7 | 24.3 | 18.2 | 5.1 |
| மசகெண்ணைய் | 368.2 | 114.1 | 322.7 | 402.6 | 100.3 | 401.4 | 9.4 | -12.1 | 24.4 |
| ஏனைய பெற்றோலியம் | 433.6 | 128.3 | 337.9 | 710.1 | 182.4 | 389.2 | 63.7 | 42.2 | 15.2 |
| இராசாயனக்கூறுகளும் கலவைகளும் | 229.8 | 176.6 | 130.1 | 286.7 | 199.6 | 143.6 | 24.8 | 13.0 | 10.4 |
| கோதுமையும் மெசுலீனும் | 188.2 | 130.0 | 144.7 | 186.7 | 132.6 | 140.8 | -0.8 | 2.0 | -2.7 |
| புடவைகள் (ஆடைகள் உற்பட) | 104.0 | 132.5 | 78.5 | 124.9 | 131.7 | 94.8 | 20.1 | -0.6 | 20.8 |
| பிளாத்திக்குகள் | 131.9 | 120.2 | 109.7 | 190.8 | 158.1 | 120.7 | 44.6 | 31.5 | 10.0 |
| வைரங்கள் | 195.7 | 96.9 | 201.9 | 206.2 | 93.8 | 219.9 | 5.4 | -3.3 | 8.9 |
| ஏனைய இடை நிலைப் பொருட்கள் | 160.2 | 181.4 | 88.3 | 217.5 | 237.2 | 91.7 | 35.8 | 30.7 | 3.9 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **184.8** | **202.9** | **91.1** | **223.9** | **217.8** | **102.8** | **21.2** | **7.3** | **12.9** |
| கட்டடப் பொருட்கள் | 262.9 | 186.9 | 140.7 | 297.9 | 183.9 | 162.0 | 13.3 | -1.6 | 15.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 209.7 | 98.0 | 214.0 | 308.6 | 109.4 | 282.0 | 47.2 | 11.7 | 31.8 |
| பொறியும் கருவியும் | 136.2 | 243.9 | 55.9 | 162.2 | 267.6 | 60.6 | 19.1 | 9.7 | 8.5 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 279.1 | 161.7 | 172.6 | 303.0 | 166.5 | 182.0 | 8.6 | 2.9 | 5.5 |
| **மொத்த இறக்குமதிகள்** | **174.0** | **159.4** | **109.1** | **230.4** | **180.1** | **127.9** | **32.4** | **13.0** | **17.2** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | **103.1** | | | **97.6** | | | **-5.3** |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கும் தொழில்சார் பணிகளுக்குமான ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப்பட்ட ஆர்வலர்களை ஒருங்கிணைத்தலில் ஒருங்கிணைத்த வழங்கல் தொடர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் கவனம் செலுத்தின. மேலும், 740 பதிவு செய்யப்பட்ட நேரடி மற்றும் மறைமுகமான ஏற்றுமதியாளர்களுக்கு மதிப்பிடப்பட்ட ரூ.18 பில்லியன் நன்மையை வழங்கக்கூடிய ஆடையல்லாத்துறை ஏற்றுமதியாளர்களின் காசுப்பாய்ச்சல் இடர்பாடுகளை குறைக்க உதவும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரித் திட்டத்தை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தொடர்ந்தும் மேற்கொண்டது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை 2016ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர் 1 பில்லியன் இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி இலக்கை அடைவதற்கு வழங்கலிலான அபிவிருத்தி, கேள்வியிலான அபிவிருத்தி மற்றும் இயலளவைக் கட்டியெழுப்பல் என்பவற்றை உள்ளடக்கும் மூன்று முனைகளிலான உபாயங்களை 2010 இல் அடையாளம் கண்டது. இது பட்டை தீட்டாத இரத்தினக்கற்களின் இறக்குமதிக்காக 2010 நவெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஆளொருவருக்கான இறக்குமதிகளுக்கான முற்பணக் கொடுப்பனவை ஐ.அ.டொலர் 10,000 இலிருந்து ஐ.அ.டொலர் 50,000 இற்கு அதிகரிப்பதற்கான வரவு செலவுத்திட்டம் 2011இன் முன்மொழிவின் மூலம் உதவப்பட்டது.

**இலங்கை பல்புடை, பிராந்திய மற்றும் இருபுடை மட்டங்களிலான வர்த்தகப் பங்கேற்பாளர்களுடன் பேச்சுவார்த்தையில் தீவிரமாக ஈடுபட்டதன் மூலம் அதன் வர்த்தக உறவுகளை தொடர்ந்தும் பலப்படுத்தியது.** 2011இல் உறுப்பினர்கள் முடிவுறுத்துவதற்கு கடப்பாட்டைக் கொண்ட உலக வர்த்தக நிறுவனத்தின் டோகா அபிவிருத்திச் சுற்றின் தற்போதைய பேச்சுவார்த்தைகளில் இலங்கை அதன் தீவிர ஈடுபாட்டை தொடர்ந்து மேற்கொண்டது. வேளாண்மை மற்றும் வேளாண்மையல்லாச் சந்தை நுழைவு தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் தேறிய உணவு இறக்குமதி செய்யும் அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கைக்கான நெகிழ்ச்சித் தன்மைகளை உறுதிப்படுத்துவதும் குறிப்பாக ஆடைகள் மற்றும் மீன்பிடித்துறைகள் உள்ளிட்ட இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளுக்கான பிரதான சந்தையில் நடைமுறையிலிருக்கும் உயர் தீர்வைகளை குறைப்பதனூடாக முன்னேற்றமடைந்த சந்தை நுழைவு என்பனவற்றை இலக்கிட்டன. இத்துடன், டோகா சுற்றின் கீழ் தீர்வைக் குறைப்புக் கடப்பாடுகளை கொண்டிருப்பதிலிருந்தும் இலங்கைக்கு தொடர்ந்தும் விலக்களிக்கப்பட்டது. புவியியல் அடையாளங்களுக்கான அதிகரித்த பாதுகாப்பு, பாரம்பரியமான அறிவு, உயிரின பல்லினத்தன்மை மூலவளங்கள் என்பன பற்றி புலமைச் சொத்து உரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்களின் கீழ் கலந்துரையாடப்பட்டன. சுங்கம் மற்றும் ஏனைய வர்த்தக வசதிப்படுத்தல் நடைமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை இணங்குவிப்பதை நோக்காகக் கொண்ட வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பான புதிய உடன்படிக்கை பற்றிய பேச்சுவார்த்தையில் இலங்கை தொடர்ந்தும் பங்கேற்றது. தெற்கு - தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமையின் மூன்றாம் சுற்று சாவோ போலோ சுற்று உடன்படிக்கைக்கான நிபந்தனைகள் கொண்ட மூலக் குறிப்பேட்டில் கைச்சாத்திடுவதன் மூலம் 2010இல் முடிவுற்றது. எனினும், ஏற்றுமதிகளின் தற்போதைய அமைப்பிலுள்ள ஒத்த தன்மைகள் காரணமாக பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பயனுறுதிமிக்க போட்டியாளர்களாக விளங்கின. மேலும், வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமையிலுள்ள முக்கிய வர்த்தகம் செய்யும் பங்கேற்பாளர்களுடன் பல நாடுகள் பிராந்திய அல்லது இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளைக் கொண்டுள்ளமையால் அவர்கள் இம் முறைமையின் கீழ் வழங்கப்பட்டதை விடக் குறைந்த தீர்வைகளை ஏற்கனவே அனுபவித்து வருகின்றனர். எனவே, 43 உறுப்பினர்களுள் 22 உறுப்பினர்கள் மட்டுமே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கு அக்கறை காட்டினர். மூன்றாவது சுற்று ஆரம்ப பேச்சுவார்த்தைகளின் விதிகளில் அதன் நலன்களை முன்னேற்றுவதில் இலங்கை ஈடுபட்டதுடன் இதில் இணைந்து கொள்வதற்காக தற்போது உடன்படிக்கைக்கான நிபந்தனைகளைக் கொண்ட மூலக் குறிப்பேட்டில் கைச்சாத்திடுவதற்கான விருப்பத்தேர்வை மீளாய்வு செய்கிறது.

**இலங்கையின் ஏற்றுமதிகள் பொதுவாக்கப்பட்ட ஜீஎஸ்பி + திட்டம் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்ட போதும் தாக்குப்பிடிக்கத்தக்கதாக இருந்தன.** 2010 பெப்புருவரி 15ஆம் நாளன்று ஜீஎஸ்பி + திட்டத்தின் கீழ் இலங்கை பெற்ற முன்னுரிமைத் தீர்வை நன்மைகள் தற்காலிகமாக மீளப் பெறப்படுகிறதென ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகள் அறிவித்தன. 2010 பெப்புருவரியிலிருந்து இத் திட்டம் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக ஐரோப்பிய ஆணைக்குழுவுடன் இலங்கை அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். எனினும், ஐரோப்பிய ஒன்றியம் 2010 ஓகத்து 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சலுகைகளை மீளப் பெற்றமையால் மிகவும் விரும்பப்பட்ட நாடுகளுக்கான வீதங்களை விடக் குறைவான சாதாரண ஜீஎஸ்பி திட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிய சந்தையை ஏற்றுமதியாளர் அணுகினர். ஜீஎஸ்பி + நன்மைகளின்றி உலகப் போட்டிக்கு முகம் கொடுப்பதற்கான நீண்டகால தயாரிப்புக்களில் கவனம் செலுத்தல், உற்பத்திகளையும் அது போல் சந்தைகளையும் வேறுபடுத்துதல் மற்றும் பன்முகப்படுத்தலை நோக்கி எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகள், உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல், வாங்குநர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், நிதி மற்றும் உள்ளீட்டுச் செலவைக் குறைத்தல், உலக வழங்கலில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் முன்னேற்றமடைந்தமை என்பன ஜீஎஸ்பி +

முறைமையிலிருந்து சாதாரண ஜீஎஸ்பி முறைமைக்கு உள்நாட்டு ஏற்றுமதிகளின் சுமுகமான மாற்றலை உறுதிப்படுத்தின. இத் தீவிரமான முன்னேற்பாட்டு வழிமுறைகள் இலங்கை ஏற்றுமதிகள் முன்னோக்கி நகர்வதை இயலச் செய்ததுடன் ஆடைகள் உள்ளிட்ட முக்கிய ஏற்றுமதிக் கைத்தொழில்களிலிருந்தான ஏறிவு செய்யப்பட்ட வருவாய்களைவிட உயர்ந்த வருவாய்களைப் பதிவு செய்தன.

**இலங்கையை கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும் ஒரேயொரு உடன்படிக்கையான ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை வழங்கிய முன்னுரிமை நுழைவு காரணமாக சீனா மற்றும் தென் கொரியாவுக்கான குறிப்பாக ஏற்றுமதிகள் உள்ளிட்ட வர்த்தகம் எதிர்பார்த்த விளைவுகளை அடைந்தது.** நான்காம் சுற்று பேச்சுவார்த்தையின் முழு செயற்படுத்தலுக்குப்பின் சீனா மற்றும் தென் கொரியா போன்ற தோற்றம் பெற்றுவரும் சந்தைகளுக்கு 40 சதவீதமான தீர்வை முறைகளில் 40 சதவீத முன்னுரிமையளவிலான சந்தை நுழைவை இது வழங்குவதால் இவ் உடன்படிக்கையின் பயன்பாட்டை அதிகரிப்பது முக்கியமாகும். சீனா, இந்தியா மற்றும் கொரியக் குடியரசுடன் ஒப்பிடுகையில் இலங்கை சிறிய வர்த்தகம் செய்யும் நாடு என்பதால் குறைந்தளவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் சேர்ந்து மேற்கூறப்பட்ட கடப்பாடுகளிலிருந்து சீனாவும் தென் கொரியாவும் இலங்கைக்கு விதிவிலக்களிக்கிறது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ், இலங்கையினால் கேட்டுக் கொள்ளப்பட்ட தீர்வைக் குறைப்புக்களின் கட்டமைப்பு மற்றும் கடப்பாடுகள் இலங்கைக்கு மிகச் சாதகமான வர்த்தகப்படுத்தலை ஏற்படுத்தின. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை மாத்திரமே இந்தியா, சீனா மற்றும் கொரியா போன்ற பெரும்பாலும் தோற்றம் பெற்று வருகின்ற நாடுகளை இணைக்கின்ற வர்த்தக உடன்படிக்கையாக இருப்பதனை கருத்திற் கொள்கையில் விரைவாக வளர்ந்து வரும் கொள்வனவு வலுவுடன் இச் சந்தைகளில் வர்த்தகத்தினை விரிவாக்குவதற்கான உள்ளார்ந்த வளம் அபரிதமாகக் காணப்படுகிறது.

**தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வரும் வர்த்தக தாராளமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்க்கணியப் பட்டியல்கள் மற்றும் சுங்கத் தீர்வைக் குறைப்புக்களின் முதலாம் கட்டம் 2010 நவெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.** ஒவ்வொரு உறுப்பினராலும் எதிர்க்கணியப் பட்டியலை 20 சதவீதத்தால் குறைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்றதுடன் இலங்கை ஏனைய உறுப்பினர் நாடுகளிலிருந்தான உற்பத்திகளுக்கான சுங்கத் தீர்வைகளை 2014 அளவில் ஆறு சமமான தவணைகளில் 0- 5 சதவீதத்திற்குக் குறைக்கும். எனினும், இலங்கையின் பிரதான பிராந்திய வர்த்தகப் பங்காளர்களான இந்தியா மற்றும் பாக்கித்தான் பெரும்பாலும் இலங்கையுடன் வெவ்வேறு இருபுடை உடன்படிக்கைகளின் கீழ் வர்த்தகம் செய்வதால் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் பயன்பாடு குறைவாகக் காணப்படுகிறது. பணிகளின் வர்த்தகத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு உதவும் பொருட்டு பணிகளின் வர்தகம் தொடர்பான சார்க் கட்டமைப்பு உடன்படிக்கை 16ஆவது சார்க் உச்சி மாநாட்டில் 2010 ஏப்பிறலில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை, இந்தியா மற்றும் வங்காளதேசம் ஏற்கனவே இவ் உடன்படிக்கைக்கு ஒப்புதலளித்துள்ளன. இவ் உடன்படிக்கையின் கீழ்வரும் கடப்பாடுகளின் அட்டவணைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இதன் நடைமுறைப்படுத்தலை இயலச் செய்வதற்காக ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இருபுடை வர்த்தக உடன்படிக்கையின் கீழான வர்த்தகம் 2010இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டியது.** இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான வர்த்தகம் உலகளாவிய பொருளாதார மெதுவடைவு காரணமாக 2009இல் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பின்பு குறிப்பிடத்தக்களவில் மீட்சியடைந்தது. 2005இல் நடைமுறைக்கு வந்த பாக்கித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலான ஆர்வம் இரு நாடுகளிலுமுள்ள ஏற்றுமதியாளர்கள் இதன் உள்ளார்ந்த வளத்தை அடையாளம் கண்டுள்ளமையால் படிப்படியாக உத்வேகமடையத் தொடங்கியுள்ளது. இந்தியா மற்றும் பாக்கித்தானுடனான தற்போதைய இருபுடை பொருளாதார உறவுகளைப் பலப்படுத்தும் பொருட்டு, இலங்கை, இரு நாடுகளுடனும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கைகளின் கீழ் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. பொருட்களிலுள்ள வர்த்தகத்திற்குப் புறம்பாக அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கைக் கட்டமைப்புப் பணிகளிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**இலங்கை அநேகமான வர்த்தக உடன்படிக்கைகளின் உறுப்பினர் ஆதலால், பெறப்பட்ட நுழைவு உரிய முறையில் பயன்படுத்தப்பட்டதா முன்னேற்றமடைந்ததா என பரிசீலனை செய்வது முக்கியமாகும்.** வழங்கப்பட்ட நுழைவு தொடர்பாக அறிவில்லாமை மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கான நன்மைகள் தீர்வைச் சலுகைகளின் பயன்பாட்டை விரிவாக்குவதற்கும் வர்த்தகப் பங்காளர்களிடையே வர்த்தகத்தைத் தாராளமயப்படுத்துவதற்கும் முக்கிய தடையாக அமைகிறது. எனவே, இவ் உடன்படிக்கைகளால் உருவாக்கப்பட்ட நீடித்த மற்றும் ஒருங்கிணைந்த விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்ட வாய்ப்புக்கள் அனைத்து உறுப்பினர் நாடுகளாலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது குறைந்த விலைகளில் சிறந்த தரமுடைய பொருட்கள் மற்றும் பணிகளை மக்கள் நுகர்வதை இயலச் செய்வதாலும் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதன் மூலம் அனைத்து உறுப்பினர் நாடுகளில் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதாலும் நன்மையளிக்குமொன்றாக விளங்கும்.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை மற்றும் வர்த்தக மாற்று விகிதம்


### ஏற்றுமதிச் செயலாற்றம்

**ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2009இன் வருவாய்களுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 8,307 மில்லியனுக்கு 17.3 சதவீதத்தால் அதிகரித்தன.** 2009இல் உலகப் பொருளாதார நெருக்கடியால் பாதிப்புக்குள்ளான வெளிநாட்டு வர்த்தகம் சிறந்த முதலீட்டுச் சூழல், கவர்ச்சிகரமான விலைகள், வெளிநாட்டுக் கேள்வியிலான படிப்படியான மீட்சி மற்றும் மீள்காப்புறுதி மீதான கடற்கலங்களுக்கான போர் இடர்நேர்வுக் கட்டுப்பணம் நீக்கப்பட்டமை என்பவற்றால் 2010இல் பலமாக மீட்சியடைந்தது. மெதுவடைந்த உலக மீட்சிக்கு மத்தியில் இவ்வாண்டின் முற்பகுதியில் வருவாய்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருந்தனவாயினும் இவ்வாண்டின் பிற்பகுதியில் பலமாக மீட்சியடைந்தன. வருவாய்களின் வளர்ச்சிக்கான மிகக் கூடிய பங்களிப்பு கைத்தொழில் ஏற்றுமதிகளாலும் (70.9 சதவீதம்) அதைத் தொடர்ந்து வேளாண்மை ஏற்றுமதிகளாலும் (28.7 சதவீதம்) ஏற்பட்டது.

**கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2010இல் ஐ.அ.டொலர் 6,173 மில்லியனுக்கு 16.4 சதவீதத்தால் அதிகரித்து பெரும்பாலும் உலகக் கேள்வியின் மீட்சி காரணமாக அனைத்துத் துணைத் துறைகளிலும் வளர்ச்சியைப் பிரதிபலித்தது.** கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கான மிகக் கூடிய பங்களிப்பு புடவை மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் பொறி மற்றும் கருவியின் ஏற்றுமதிகளிலிருந்து ஏற்பட்டது. உணவு மற்றும் குடிபானம் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் சிறப்பாகச் செயலாற்றின.

**2010இல் புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 3,504 மில்லியனாக விளங்கி இந்த ஆண்டுப்பகுதியில் 7.0 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்து மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளில் கிட்டத்தட்ட 42 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.** அண்மையில் நடக்கவிருக்கும் ஜிஎஸ்பி + நன்மைகளின் மீளப் பெற்றுக்கொள்ளலை கவனத்திற் கொண்டு அநேகமான தயாரிப்பாளர்கள் போட்டிக்கு முகம் கொடுப்பதை இயலச் செய்வதற்கு உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தியதுடன் புதிய வடிவமைப்புக்களை மேம்படுத்துவதன் மூலம் உயர்மட்ட பெறுமதிகூட்டலை அடைந்து வர்த்தக அடையாளமிட்ட உற்பத்திகளில் கவனம் செலுத்தி உயர் பெறுமதியைக் கொண்ட பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இதன் விளைவாக, மொத்த ஆடை ஏற்றுமதிகளில் கிட்டத்தட்ட 50.7 சதவீதத்தைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஆடை ஏற்றுமதிகள் 2010இல் ஐ.அ.டொலர் 1,678 மில்லியனுக்கு 3.0 சதவீதத்தால் அதிகரித்தன. இலங்கையின் இரண்டாவது பெரிய சந்தையான ஐக்கிய அமெரிக்க நாட்டுக்கான ஆடை ஏற்றுமதிகள் 2010இல் ஐ.அ.டொலர் 1,356 மில்லியனுக்கு 5.5 சதவீதத்தால் அதிகரித்தன.

வரைபடம் 5.3 ஏற்றுமதி செயலாற்றம்




**இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, பொறிகள் மற்றும் கருவிகள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற கைத்தொழில் ஏற்றுமதிகளின் மற்றைய பெரும்பாலான வகைகளிலிருந்தான வருவாய்கள் 2010இல் அதிகரித்தன.** 2010இல் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 568 மில்லியனுக்கு 47.5 சதவீதத்தினால் அதிகரித்து பிரதானமாக திண்ம டயர் மற்றும் இறப்பர் கையுறைகளை உள்ளடக்கியிருந்தன. உணவு, பானம் மற்றும் புகையிலை வகையிலிருந்தான வருவாய்கள் 2010இல் ஐ.அ.டொலர் 503 மில்லியனுக்கு 24.0 சதவீதத்தால் அதிகரித்தன. இது மீன் (ஐ.அ.டொலர் 163 மில்லியன்) விலங்குத்தீன் (ஐ.அ.டொலர் 76 மில்லியன்) பதனிடப்பட்ட பழவர்க்கங்கள் மற்றும் காய்கறிகள் (ஐ.அ.டொலர் 30 மில்லியன்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. படகுகள் மற்றும் ஈருருளிகள் போன்ற போக்குவரத்துக் கருவிகள், மின்மாற்றிகள், நிலையியற்படுத்தும் மின்பிரிப்பிகள், மின்போடப்பட்ட துணைக்கருவி காப்பிடப்பட்ட கம்பிகள் போன்ற மின்னியல் கருவிகள் என்பனவற்றை உள்ளடக்கக்கூடிய பொறிகள் மற்றும் கருவிகளின் ஏற்றுமதிகள் 2010இல் ஐ.அ.டொலர் 488 மில்லியனுக்கு 47.7 சதவீதத்தினால் அதிகரித்தன. 2010இல் செய்முறைக்குட்படுத்தப்பட்ட வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 335 மில்லியனுக்கு 1.5 சதவீதத்தினால் அதிகரித்தன. 2010இல் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 93 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அருங்கற்களும் ஓரளவு அருங்கற்களுமே வழிவகுத்தன.

**வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டு முழுவதும் பன்னாட்டுச் சந்தையில் நிலவிய உயர் விலைகள் காரணமாக 2010இல் ஐ.அ.டொலர் 2,041 மில்லியனுக்கு 20.8 சதவீதத்தால் அதிகரித்தன.** 2010இன் வருவாய்களில் தேயிலை

அட்டவணை 5.4 ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2009 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2009 பங்கு % | 2010 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2010 (அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் (அ) ஐ.அ.டொலர் மில்லியன் | வளர்ச்சி வீதம் % | வளர்ச்சிக்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **1,690.3** | **23.9** | **2,041.4** | **24.6** | **351.1** | **20.8** | **28.7** |
| தேயிலை | 1,185.1 | 16.7 | 1,375.4 | 16.6 | 190.3 | 16.1 | 15.6 |
| இறப்பர் | 98.6 | 1.4 | 170.4 | 2.1 | 71.8 | 72.8 | 5.9 |
| தெங்கு | 166.2 | 2.4 | 173.6 | 2.1 | 7.4 | 4.4 | 0.6 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 58.2 | 0.8 | 55.4 | 0.7 | -2.8 | -4.7 | -0.2 |
| ஏனையவை | 108.0 | 1.5 | 118.2 | 1.4 | 10.1 | 9.4 | 0.8 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 240.4 | 3.4 | 322.0 | 3.9 | 81.6 | 33.9 | 6.7 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **5,305.4** | **74.9** | **6,172.8** | **74.3** | **867.3** | **16.4** | **70.9** |
| உணவு, குடிப்பானங்கள் மற்றும் புகையிலை | 406.1 | 5.7 | 503.4 | 6.1 | 97.3 | 24.0 | 8.0 |
| புடவைகளும் ஆடைகளும் | 3,274.2 | 46.2 | 3,504.1 | 42.2 | 229.9 | 7.0 | 18.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 134.7 | 1.9 | 216.3 | 2.6 | 81.5 | 60.5 | 6.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 384.7 | 5.4 | 567.6 | 6.8 | 182.9 | 47.5 | 15.0 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 36.4 | 0.5 | 39.1 | 0.5 | 2.7 | 7.3 | 0.2 |
| தோல், பயணப்பொருட்களும் காலணியும் | 13.6 | 0.2 | 17.1 | 0.2 | 3.6 | 26.3 | 0.3 |
| பொறியும் கருவியும் | 330.3 | 4.7 | 487.8 | 5.9 | 157.5 | 47.7 | 12.9 |
| வைரம் மற்றும் ஆபரணங்கள் | 329.8 | 4.7 | 334.7 | 4.0 | 4.9 | 1.5 | 0.4 |
| ஏனைய கைத்தொழில்கள் உற்பத்திகள் | 395.6 | 5.6 | 502.7 | 6.1 | 107.1 | 27.1 | 8.8 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **88.7** | **1.3** | **92.6** | **1.1** | **3.9** | **4.4** | **0.3** |
| இரத்தினக்கற்கள் | 68.9 | 1.0 | 70.3 | 0.9 | 1.3 | 1.9 | 0.1 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 19.8 | 0.3 | 22.4 | 0.3 | 2.6 | 12.8 | 0.2 |
| **பாகுப்படுத்தப்படாதவை** | **0.0** | **0.0** | **0.3** | **0.0** | **0.2** | **...** | **0.0** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **7,084.5** | **100.0** | **8,307.0** | **100.0** | **1,222.5** | **17.3** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **114.94** | | **113.06** | | | | |


(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(இ) சீராக்கப்பட்டவை
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலவாணி வீதம்

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் ஆபரண அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதிகள் 15.6 சதவீதத்திற்கும் அதைத் தொடர்ந்து சிறு வேளாண்மை ஏற்றுமதிகள் (6.7 சதவீதம்), இறப்பர் (5.9 சதவீதம்) மற்றும் தெங்கு (0.6 சதவீதம்) என்பனவிற்கும் வகைகூறின.

**அளவிலான அதிகரிப்பு மற்றும் உயர் விலைகள் காரணமாக 2010இல் பன்னாட்டுச் சந்தையிலான தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,375 மில்லியனுக்கு 16.1 சதவீதத்தால் அதிகரித்தன.** இலங்கைத் தேயிலையின் சிறந்த தரம் மற்றும் மரபுவழித் தேயிலைக்கான உயர் பன்னாட்டுக் கேள்வி காரணமாக இலங்கைத் தேயிலை 2010இல் உலகின் முக்கிய ஏல நிலையங்களிடையே உயர் விலைகளைத் தொடர்ந்து பெற்றது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2010இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 4.38 இற்கு 7.0 சதவீதத்தால் உயர்ந்தது. வரட்சி நிலைமைகள் மற்றும் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் உயர்ந்த உள்நாட்டு நுகர்வு காரணமாக பன்னாட்டுச் சந்தையில் கறுப்புத் தேயிலைக்குப் பற்றாக்குறை காணப்பட்டது. எனினும், இலங்கையில் பொதுவாகக் காணப்பட்ட சிறந்த வானிலை, நேரம் பிந்தாத வளமாக்கிப் பிரயோகம் மற்றும் சிறந்த வேளாண்மை நடைமுறைகள் காரணமாக தேயிலை உற்பத்தி 2010இல் வரலாற்று ரீதியிலான உயர் மட்டங்களை விஞ்சியது. இதன் விளைவாக, தேயிலையின் ஏற்றுமதி அளவு 2010இல் 314 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு 8.5 சதவீதத்தால் அதிகரித்தது. கென்யா மற்றும் இந்தியாவுக்குப் பின்பு இலங்கை உலகில் தேயிலையின் மூன்றாவது மிகப் பெரிய ஏற்றுமதியாளராக தொடர்ந்து விளங்கியது. சுதந்திர அரசுகளின் பொதுநலவாயம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் 2010இல் இலங்கைத் தேயிலையின் ஏற்றுமதிகளுக்கான முக்கிய சேரிடங்களாக தொடர்ந்து விளங்கின. உயர் பெறுமதிகூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்துவதற்கு 2010 நவெம்பர் 23 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரசு தொகை வடிவிலான தேயிலை மீதான செஸ்வரியை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.10 இற்கு அதிகரித்தது.

வரைபடம் 5.4 பண்டங்களின்படி ஏற்றுமதிகள் - 2010




**சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், இறப்பர் மற்றும் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2010இல் ஆரோக்கியமான வளர்ச்சியைக் காட்டின.** சிறுவேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2010இல் ஐ.அ.டொலர் 322.0 மில்லியனுக்கு 33.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு கொக்கோ உற்பத்திகள், ஏலக்காய் மற்றும் இன்றியமையாத எண்ணெய் என்பனவற்றிற்குக் கிடைத்த உயர்ந்த பன்னாட்டு விலைகளும் எள்ளு, கொக்கோ உற்பத்திகள், மிளகு என்பனவற்றின் அதிகரித்த ஏற்றுமதி அளவும் காரணிகளாக இருந்தன. கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி போன்ற குறிப்பிட்ட வாசனைப் பொருட்களின் அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களுக்கு அதிகரித்த அளவு, விலை ஆகிய இரண்டும் காரணிகளாக விளங்கின. 2010இல் இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 72.8 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்து ஐ.அ.டொலர் 170 மில்லியனை அடைந்தன. இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யப்படும் பிரதான நாடுகளின் குறைந்த உற்பத்தி சீனா மற்றும் இந்தியாவிலிருந்து எழும் இயற்கை இறப்பருக்கான உயர் கேள்வி இறப்பர் விலைகள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தி இவ்வாண்டு முழுவதும் விலைகளை அதிகரிக்கச் செய்தது. இதன் விளைவாக, இறப்பரின் ஏற்றுமதி விலைகள் 2010இல் வரலாற்றில் உயர் மட்டங்களை அடைந்தது. இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை 2010இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 3.31இற்கு 87.9 சதவீதத்தால் உயர்ந்தது. உயர் ஏற்றுமதி விலைகளுக்கு மத்தியிலும் இறப்பரின் ஏற்றுமதி அளவுகள் பெறுமதிகூட்டப்பட்ட ஏற்றுமதிகளை உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டில் இறப்பரின் அதிகரித்த பயன்பாடு காரணமாக 2010இல் 8.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெறுமதிகூட்டப்பட்ட இறப்பர் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கு மூலப்பொருள் வடிவிலான இறப்பர் ஏற்றுமதி மீதான செஸ்வரி 2010 நவெம்பர் 23இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கிலோகிறாமொன்றுக்கு ரூ.4 இலிருந்து ரூ.8 இற்கு அதிகரிக்கப்பட்டது. தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தென்னந்தும்பு போன்ற தெங்கு துணை உற்பத்திகள் அடைந்த உயர் பெறுமதி காரணமாக 2010இல் ஐ.அ.டொலர் 174.0 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தால் அதிகரித்தது.

## இறக்குமதிச் செயலாற்றம்

**இறக்குமதிகள் மீதான செலவினம் 2009இன் ஐ.அ.டொலர் 10,207 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 13,512 மில்லியனுக்கு ஆண்டுக்கு ஆண்டு 32.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து பொருட்களின் உயர் பன்னாட்டு விலைகளிலும் உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளிலான அதிகரிப்பால் வேண்டப்பட்ட அதிகரித்த இறக்குமதி அளவுகளிலும் பிரதிபலிக்கிறது.** நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்கள் ஆகிய இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளும் இவ்வாண்டில் அதிகரித்தன.

வரைபடம் 5.5 இறக்குமதி செயலாற்றம்




இறக்குமதிகளுக்கான மிகப் பெரிய பங்களிப்பான 55.3 சதவீதம் இடைநிலைப் பொருட்களிலிருந்து ஏற்பட்டிருக்கையில் நுகர்வுப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களிலிருந்தான பங்களிப்பு முறையே 27.2 சதவீதமாகவும் 15.7 சதவீதமாகவும் விளங்கியது.

**இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் உயர் பெற்றோலிய இறக்குமதிகள் காரணமாக 2010இல் ஐ.அ.டொலர் 7,496 மில்லியனுக்கு 32.2 சதவீதத்தால் அதிகரித்தது.** மசகெண்ணெயின் இறக்குமதி விலைகள் உலகளாவிய பொருளாதார மீட்சியுடன் சேர்ந்து 2009இன் இறுதியளவில் அதிகரித்துச் செல்லும் போக்கைக் காட்டியது. மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2009இன் பீப்பாய் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 63.93 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 79.52 இற்கு 24.4 சதவீதத்தால் அதிகரித்தது. இது பெற்றோலிய இறக்குமதிச் செலவை 2010இல் ஐ.அ.டொலர் 3,019 மில்லியனுக்கு 39.3 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தது. ஐ.அ.டொலர் 1,732 மில்லியனாக விளங்கிய புடவைகள் மற்றும் ஆடைகளின் இறக்குமதிகள் 2009 உடன் ஒப்பிடுகையில் 20.1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து ஆடை ஏற்றுமதிகளின் வளர்ச்சியின் உள்ளார்ந்த வளத்தைப் பிரதிபலிக்கிறது. இதேவேளை, உயர் விலைகள் மற்றும் அதிகரித்த அளவுகளால் வழிநடத்தப்பட்டு வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் 2010இல் ஐ.அ.டொலர் 240 மில்லியனுக்கு 24.3 சதவீதத்தால் அதிகரித்தது. 2010இல் இறக்குமதி செய்யப்பட்ட வளமாக்கிகளில் 63 சதவீதம் யூரியாவைக் கொண்டுள்ளதுடன் இது பெருமளவில் நெல் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டது. இரசாயனங்கள் மற்றும் தாள் போன்ற இடைநிலைப் பொருட்களின் ஏனைய வகைகளின் இறக்குமதிகளும் இக்காலப்பகுதியில் அதிகரித்தன.

**2010இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 2,870 மில்லியனுக்கு 45.6 சதவீதத்தால் உயர்ந்திருக்கையில் இவ்வதிகரிப்பில் உணவல்லா வகை 15.2 சதவீதத்திற்கும் கூடுதலாக பங்களிப்புச் செய்தது.** பெரும்பாலும் உந்து உருளிகள் மற்றும் உந்து ஈருருளிகளை உள்ளடக்கியுள்ள உணவல்லா நுகர்வுப் பொருட்கள் வகை

அட்டவணை 5.5

**இறக்குமதிகளின் உள்ளமைப்பு**

| வகை | 2009 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2009 பங்கு % | 2010 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2010 (அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் (அ) ஐ.அ.டொலர் மில்லியன் | வளர்ச்சி வீதம் (அ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (அ) % |
|---|---|---|---|---|---|---|---|
| நுகர்வுப் பொருட்கள் | 1,971.8 | 19.3 | 2,870.3 | 21.2 | 898.5 | 45.6 | 27.2 |
| உணவும் குடிப்பாணங்கள் | 1,246.2 | 12.2 | 1,641.8 | 12.2 | 395.6 | 31.7 | 12.0 |
| அரிசி | 22.9 | 0.2 | 59.0 | 0.4 | 36.1 | 158.1 | 1.1 |
| சீனி | 218.7 | 2.1 | 363.3 | 2.7 | 144.6 | 66.1 | 4.4 |
| கோதுமை | 259.3 | 2.5 | 257.2 | 1.9 | -2.0 | -0.8 | -0.1 |
| ஏனையவை | 745.4 | 7.3 | 962.3 | 7.1 | 217.0 | 29.1 | 6.6 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 725.6 | 7.1 | 1,228.5 | 9.1 | 502.9 | 69.3 | 15.2 |
| இடைநிலைப் பொருட்கள் | 5,669.2 | 55.5 | 7,495.9 | 55.5 | 1,826.7 | 32.2 | 55.3 |
| பெற்றோலியம் | 2,166.6 | 21.2 | 3,018.7 | 22.3 | 852.1 | 39.3 | 25.8 |
| வளமாக்கி | 193.4 | 1.9 | 240.5 | 1.8 | 47.1 | 24.3 | 1.4 |
| இரசாயணங்கள் | 312.5 | 3.1 | 389.9 | 2.9 | 77.4 | 24.8 | 2.3 |
| ஆடைகளும் புடவைகளும் | 1,442.0 | 14.1 | 1,732.3 | 12.8 | 290.3 | 20.1 | 8.8 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,554.7 | 15.2 | 2,114.5 | 15.6 | 559.9 | 36.0 | 16.9 |
| முதலீட்டுப் பொருட்கள் | 2,450.8 | 24.0 | 2,969.6 | 22.0 | 518.7 | 21.2 | 15.7 |
| பொறியும் கருவியும் | 1,012.8 | 9.9 | 1,205.9 | 8.9 | 193.1 | 19.1 | 5.8 |
| போக்குவரத்துக் கருவிகள் | 436.3 | 4.3 | 642.2 | 4.8 | 205.9 | 47.2 | 6.2 |
| கட்டடப் பொருட்கள் | 714.5 | 7.0 | 809.6 | 6.0 | 95.1 | 13.3 | 2.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 287.3 | 2.8 | 311.9 | 2.3 | 24.6 | 8.6 | 0.7 |
| பகுக்கப்படாத இறக்குமதிகள் | 114.8 | 1.1 | 175.9 | 1.3 | 61.1 | 53.2 | 1.9 |
| மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ) | 10,206.6 | 100 | 13,511.7 | 100.0 | 3,305.0 | 32.4 | 100.0 |
| ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (ஈ) | 114.94 | | 113.06 | | | | |

(அ) தற்காலிகமானவை
(ஆ) மீள் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(இ) சீராக்கப்பட்டவை
(ஈ) ரூபா/ ஐ.அ.டொ. செலவாணி வீதம்


மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கை மத்திய வங்கி

246.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் 2010இல் பதிவு செய்தது. இது முக்கியமாக முன்னேற்றமடைந்த பொருளாதாரச் செயற்பாடு மற்றும் தனிப்பட்ட பாவனைக்கான உந்து ஈருருளிகளின் இறக்குமதிகள் மீதான வரிக் குறைப்பால் ஏற்பட்டது. 2010இல் இறப்பர் டயர்கள் மற்றும் ரியூப்புக்களின் இறக்குமதிகளும் 49.9 சதவீதத்தால் அதிகரித்தன.

**சீனி மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிகளில், ஏற்பட்ட உயர் செலவினம் காரணமாக உணவு இறக்குமதிகள் 31.7 சதவீதத்தால் அதிகரித்தன.** சீனி உற்பத்தி செய்யப்படும் பிரதான நாடுகளின் வழங்கல் தடைகளுக்கு மத்தியில் சீனியின் பன்னாட்டு விலைகள் 2010இல் வரலாற்றில் உயர்ந்த மட்டங்களை அடைந்தன. சீனியின் சராசரி இறக்குமதி விலை 38.6 சதவீதத்தால் அதிகரித்ததுடன் சீனி இறக்குமதிகள் மீதான செலவினம் 2010இல் ஐ.அ.டொலர் 363 மில்லியனுக்கு 66.1 சதவீதத்தால் அதிகரித்தது. பால் உற்பத்தி இறக்குமதிகள் மீதான செலவினம் 2010இல் ஐ.அ.டொலர் 259 மில்லியனுக்கு 56.2 சதவீதத்தால் அதிகரித்து உயர் பன்னாட்டு விலைகளைப் பிரதிபலித்தன. கோதுமை இறக்குமதிகள் மீதான செலவினம் 2009இன் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2010இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

**2010இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் பொறியின் இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர் செலவினம் காரணமாக ஐ.அ.டொலர் 2,970 மில்லியனுக்கு 21.2 சதவீதத்தால் அதிகரித்தன.** போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்த பொருளாதாரச் செயற்பாடுகள் காரணமாக 47.2 சதவீதத்தால் அதிகரித்தது. போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதிகள், பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்துக்கான உந்து ஊர்திகள் மற்றும் தொடர்பான உதிரிப்பாகங்களை உள்ளடக்கியிருந்தன. பொறி மற்றும் கருவியின் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 1,206

வரைபடம் 5.6 பண்டங்களின்படி இறக்குமதிகள் - 2010



மில்லியனுக்கு 19.1 சதவீதத்தால் அதிகரித்தன. இது, பெரும்பாலும் கடத்துகின்ற கருவிகள், தன்னியக்க தரவு செயல்முறைப்படுத்தல் பொறிகள் மற்றும் மின்மாற்றிகளை உள்ளடக்கியிருந்தன. இது நாடு முழுவதும் பல எண்ணிக்கையான பாரிய அளவு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களால் ஏற்பட்டது. இவ்வாண்டில் கட்டடப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான செலவினம் ஐ.அ.டொலர் 810 மில்லியனுக்கு 13.3 சதவீதத்தால் அதிகரித்து விரிவடைந்த கட்டடவாக்கச் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கிறது.

## வர்த்தக நிலுவை

**ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்பாக இறக்குமதிகள் மீதான செலவினத்தின் விரைவடைந்த வளர்ச்சி 2010இல் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்தது.** 2009இல் கடுமையான சுருக்கம் காணப்பட்டமையினைத் தொடர்ந்து திரண்ட வர்த்தகப் பற்றாக்குறை 2009இன் 3,122 மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 5,205 மில்லியனுக்கு 66.7 சதவீதத்தால் விரிவடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை 2010இல் 10.5 சதவீதமாக விளங்கியது.

**அட்டவணை 5.6 முக்கிய இறக்குமதிகளின் அளவு (அ)**

'000 மெ.தொ.

| விடயம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **12** | **88** | **84** | **52** | **126** |
| 1ஆம் காலாண்டு | 3 | 4 | 41 | 3 | 121 |
| 2ஆம் காலாண்டு | 2 | 7 | 28 | 3 | 2 |
| 3ஆம் காலாண்டு | 3 | 3 | 11 | 2 | 2 |
| 4ஆம் காலாண்டு | 4 | 74 | 4 | 44 | 1 |
| **கோதுமை** | **1,200** | **952** | **919** | **1,026** | **1,052** |
| 1ஆம் காலாண்டு | 287 | 204 | 272 | 288 | 352 |
| 2ஆம் காலாண்டு | 321 | 388 | 312 | 229 | 171 |
| 3ஆம் காலாண்டு | 331 | 274 | 153 | 220 | 292 |
| 4ஆம் காலாண்டு | 261 | 87 | 182 | 289 | 236 |
| **சீனி** | **525** | **481** | **575** | **467** | **559** |
| 1ஆம் காலாண்டு | 112 | 112 | 163 | 123 | 145 |
| 2ஆம் காலாண்டு | 137 | 138 | 131 | 110 | 156 |
| 3ஆம் காலாண்டு | 127 | 118 | 167 | 142 | 154 |
| 4ஆம் காலாண்டு | 149 | 113 | 114 | 92 | 104 |
| **பெற்றோலியம் (மசகெண்ணை)** | **2,151** | **1,938** | **1,853** | **2,066** | **1,819** |
| 1ஆம் காலாண்டு | 592 | 272 | 229 | 559 | 332 |
| 2ஆம் காலாண்டு | 535 | 557 | 525 | 417 | 541 |
| 3ஆம் காலாண்டு | 582 | 559 | 544 | 416 | 541 |
| 4ஆம் காலாண்டு | 442 | 550 | 555 | 674 | 405 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்** | **2,302** | **2,314** | **2,386** | **2,154** | **2,873** |
| 1ஆம் காலாண்டு | 540 | 597 | 778 | 409 | 786 |
| 2ஆம் காலாண்டு | 587 | 646 | 583 | 605 | 879 |
| 3ஆம் காலாண்டு | 479 | 517 | 465 | 564 | 504 |
| 4ஆம் காலாண்டு | 696 | 554 | 560 | 576 | 703 |
| **வளமாக்கி** | **633** | **569** | **772** | **501** | **649** |
| 1ஆம் காலாண்டு | 166 | 62 | 125 | 46 | 88 |
| 2ஆம் காலாண்டு | 203 | 171 | 223 | 109 | 238 |
| 3ஆம் காலாண்டு | 119 | 131 | 216 | 123 | 165 |
| 4ஆம் காலாண்டு | 146 | 205 | 208 | 223 | 158 |

(அ) சீராக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை


மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கை மத்திய வங்கி

## வர்த்தக மாற்று விகிதம்

**ஏற்றுமதி விலைகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு 2010இல் வர்த்தக மாற்று விகிதத்தை 5.3 சதவீதத்தால் நலிவடையச் செய்தது.** பன்னாட்டுச் சந்தையில் பொருட்களின் ஏற்றுமதி விலைகள் உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சியுடன் 2010இல் கணிசமானளவில் அதிகரித்தன. இதன் விளைவாக, ஏற்றுமதிகளின் சராசரி விலைச்சுட்டெண் 2010இல் 10.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலைச் சுட்டெண் அசாதாரண பன்னாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்வி காரணமாக 83.3 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைச்சுட்டெண் 2010இல் மேலும் 4.2 சதவீதத்தால் அதிகரித்தது. கைத்தொழில் ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணும் 2010இல் 11.2 சதவீதத்தால் அதிகரித்து 12.2 சதவீதத்தால் விலைகள் அதிகரித்த புடவை மற்றும் ஆடைகள் துணை வகை உள்ளிட்ட அனைத்துத் துணை வகைகளிலும் விலை அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன.

**2010இல் இறக்குமதிகளின் சராசரி விலைகள் 17.2 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்து அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளில் விலை அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன.** நுகர்வுப் பொருட்களிடையே உணவு மற்றும் நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி விலைகள் முறையே 25.5 சதவீதத்தாலும் 32.4 சதவீதத்தாலும் கணிசமானளவில் அதிகரித்தன. இடைநிலைப் பொருட்களின் சராசரி விலைகள் பெரும்பாலும் மசகெண்ணெய் விலைகளிலேற்பட்ட 24.4 சதவீத அதிகரிப்புக் காரணமாக 15.8 சதவீதத்தால் அதிகரித்தன. வளமாக்கியின் இறக்குமதி விலைகளும் 2010இல் 5.1 சதவீதத்தால் உயர்வடைந்தன. இப் போக்குடன் இணங்கிச் செல்லும் வகையில் இடைநிலைப் பொருட்களின் அநேகமாக அனைத்து ஏனைய துணை வகைகளின் விலைகளும் அதிகரித்தன. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி விலைகளும் 2010இல் 12.9 சதவீதத்தால் அதிகரித்து அநேகமாக அனைத்துத் துணை வகை விலைகளிலும் அதிகரிப்பைப் பிரதிபலித்தன.

**வரைபடம் 5.7 வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்**




## வர்த்தகத்தின் போக்கு

**மேற்கத்தைய நாடுகள் 2010இல் நலிவடைந்த அவற்றின் பொருளாதாரங்களுக்கு மத்தியிலும் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளின் சேரிடங்களாக தொடர்ந்து விளங்கிய வேளையில் இந்தியா, சிங்கப்பூர் மற்றும் சீனா 2010இல் இறக்குமதி ஆரம்பிக்கும் மிக முக்கிய நாடுகளாக விளங்கின.** இந்தியா இலங்கையின் 20 சதவீத இறக்குமதிகளுக்கு வகைகூறியதன் மூலமும் மொத்த ஏற்றுமதிகளில் 5.6 சதவீதத்தைக் கொண்டு மூன்றாவது மிகப் பெரிய ஏற்றுமதி சேரிடமாக இருந்ததன் மூலமும் 2010இல் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளர் நாடாக விளங்கியது.


**இலங்கைக்கான முக்கிய ஏற்றுமதிச் சந்தையான ஐக்கிய அமெரிக்க நாடு ஏற்றுமதிகளின் 21.1 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் இதைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் மற்றும் இத்தாலி என்பன வகைகூறின.** 2010இல் மொத்த ஏற்றுமதிகளில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் 35.0 சதவீதத்திற்கு வகைகூறின. இவற்றினுள், ஐக்கிய இராச்சியம், இத்தாலி, சேர்மனி மற்றும் பெல்ஜியம் மொத்த ஏற்றுமதிகளில் முறையே 12.3 சதவீதம், 5.6 சதவீதம், 4.8 சதவீதம் மற்றும் 4.8 சதவீதத்தை பிரசன்னப்படுத்தி பிரதான ஏற்றுமதியாளர்களாக தொடர்ந்து விளங்கின. நாட்டின் புடவை மற்றும் ஆடைகளில் கிட்டத்தட்ட 16.3 சதவீதம் சேர்மனிக்கும் இத்தாலிக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் இலங்கையின் மெருகிடப்பட்ட வைரங்களின் 72.6 சதவீதம் வைரங்களுக்கான உலகின் முன்னணி வர்த்தக நிலையங்களில் ஒன்றான பெல்ஜியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளுள் முறையே 15.9 சதவீதத்திற்கும் 10.1 சதவீதத்திற்கும் வகைகூறிய ரூசியா மற்றும் ஈரான் 2010இல் தேயிலை ஏற்றுமதிகளுக்கான முக்கிய சேரிடங்களாகத் தொடர்ந்து விளங்கின. மத்திய கிழக்குப் பிராந்தியம் இலங்கைத் தேயிலைக்கான மிக முக்கியமான ஏற்றுமதி சேரிடமாக விளங்கி மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் 48.1 சதவீதத்திற்கு வகைகூறியது.

**2010இல் இந்தியா இறக்குமதிகளின் மிகப் பெரிய மூலமாகத் தொடர்ந்து விளங்கி இறக்குமதிகளின் 19.0 சதவீதமாக வகைகூறியது.** இந்தியாவிலிருந்தான பிரதான இறக்குமதிகளாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், உந்து ஈருருளிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் விளங்கின. இறக்குமதி மூல நாடுகளில் இரண்டாவது, மூன்றாவது பெரிய நாடுகளாக சிங்கப்பூர் மற்றும் சீனா விளங்கின. சிங்கப்பூரிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக வளமாக்கி மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் விளங்குகையில் சீனாவிலிருந்தான முக்கிய இறக்குமதியாக பருத்தி விளங்கியது. ஈரானும் யப்பானும் இலங்கைக்கான மிகப் பெரிய நான்காவது, ஐந்தாவது இறக்குமதி மூல நாடுகளாக தொடர்ந்து விளங்கின. ஈரான் மற்றும் யப்பானிலிருந்தான இறக்குமதிகள் பெரும்பாலும் மசகெண்ணெய் மற்றும் உந்து ஊர்திகளை உள்ளடக்கியிருந்தன.

வரைபடம் 5.8 நாடுகளின்படி ஏற்றுமதிகள்




வரைபடம் 5.9 நாடுகளின்படி இறக்குமதிகள்



## 5.4 பணிகளிலுள்ள வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

### பணிகளிலுள்ள வர்த்தகம்

**பொருளாதாரச் செயற்பாடுகளிலான விரிவாக்கம் மற்றும் உலகப் பொருளாதாரத்தின் மீட்சியுடன் பணிகளிலான வர்த்தகம் 2010இல் குறிப்பிடத்தக்க உயர் மிகையைப் பதிவு செய்தது.** பெரும்பாலும் போக்குவரத்து, பயணம், தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகளை உள்ளடக்கிய பணிகள் கணக்கு 2010இல் ஐ.அ.டொலர் 698 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் பணிகள் கணக்கின் அனைத்துத் துணைத் துறைகளும் குறிப்பிடத்தக்களவில் செயலாற்றி எதிர்வரும் ஆண்டுகளில் உறுதியான வளர்ச்சிக்கு நாட்டில் காணப்படும் மிகச் சிறந்த ஆற்றலைக் காட்டுகிறது.

### போக்குவரத்துப் பணிகள்

**பணிகள் கணக்கிற்கு முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் போக்குவரத்துப் பணிகள் இவ்வாண்டில் சிறப்பாகச் செயலாற்றின.** பயணிகள் கட்டணங்கள், சரக்குக் கட்டணங்கள், துறைமுகம் மற்றும் வானூர்தி தொடர்பான செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ள போக்குவரத்துப் பணிகள் கணக்கிலான மொத்த உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33.6 சதவீதம் கொண்ட உயர் வீதத்தால் ஐ.அ.டொலர்கள் 1,156 மில்லியன்களுக்கு வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சி இலங்கைக்குப் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, சேகரிக்கப்பட்ட சரக்குக் கட்டணங்களிலான அதிகரிப்பு மற்றும் துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையம் தொடர்பான ஏனைய வியாபாரப் பணிகளிலான மேம்பாட்டால் ஏற்பட்டது. இதேவேளை, அதிகரித்த பன்னாட்டு வர்த்தகம் மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக இலங்கையரால் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த செலவினத்துடன் போக்குவரத்துப் பணிகள் கணக்கிலான வெளிப்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010இல் 30 சதவீதத்தால் அதிகரித்தன.

**2010இல் பயணிகள் கட்டணங்களின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 468 மில்லியனிற்கு 15.8 சதவீதத்தினால் அதிகரித்தன.** வியாபாரம் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய இரண்டிற்குமாக இலங்கைக்கு பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 2010இல் எண்ணெய் மிகைக் கட்டணங்கள் விதிக்கப்பட்டதன் காரணமாக தேசிய வான் நிறுவனமான சிறிலங்கன் எயர்லைன்ஸால் விதிக்கப்பட்ட வானூர்திக் கட்டண அதிகரிப்புக் காரணமாக மொத்த உட்பாய்ச்சல்கள் மேம்பாடடைந்தன. சிறிலங்கன் எயர்லைன்ஸ் இரண்டு புதிய வானூர்திகளை 2010இல் கொள்வனவு செய்ததுடன் 14 ஆகக் காணப்படும் தற்போதைய ஊர்தித் தொகுதியை 2012 அளவில் 20இற்கு உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் கூடிய வானூர்திகளைக் கொள்வனவு செய்யத் திட்டமிடுகிறது. புதிய வானூர்திகளின் திட்டமிடப்பட்ட கொள்வனவு, பறப்புச் சேரிடங்களின் விரிவாக்கம் மற்றும் தேசிய வானூர்தி நிறுவனமான சிறிலங்கன் எயர்லைன்சால் மேற்கொள்ளப்பட்ட பறப்புக்களின் எண்ணிக்கை என்பவற்றால் நடுத்தர காலத்தில் உட்பாய்ச்சல்கள் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 5.7 தேறிய பணிகள்,வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்கள் (அ)**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010 (ஆ) | 2009 | 2010 (ஆ) |
| 1. போக்குவரத்து பணிகள் | 235 | 336 | 26,822 | 37,963 |
| 2. பயணம் | -61 | 123 | -7,094 | 13,778 |
| 3. தொடர்பூட்டல் பணிகள் | 26 | 27 | 3,004 | 3,106 |
| 4. கணனி மற்றும் தகவல் பணிகள் | 245 | 265 | 28,161 | 29,962 |
| 5. கட்டடவாக்கப் பணிகள் | 34 | 36 | 3,936 | 4,037 |
| 6. காப்புறுதிப் பணிகள் | 28 | 31 | 3,247 | 3,481 |
| 7. ஏனைய வியாபாரப் பணிகள் | -100 | -102 | -11,450 | -11,591 |
| 8. அரச செலவினம் வே.எ.கு | -16 | -17 | -1,846 | -1,976 |
| **மொத்த தேறிய பணிகள்** | **391** | **698** | **44,780** | **78,760** |
| 1. ஊழியர்களின் இழப்பீடு | -11 | -11 | -1,233 | -1,235 |
| 2. நேரடி முதலீடு | -223 | -377 | -25,573 | -42,603 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -254 | -184 | -29,007 | -20,812 |
| **மொத்த தேறிய வருமானம்** | **-488** | **-572** | **-55,814** | **-64,650** |
| 1. தனியார் | 2,927 | 3,608 | 336,578 | 407,967 |
| 2. பொது அரசு | 77 | 52 | 8,920 | 5,918 |
| **மொத்த தேறிய நடைமுறை மாற்றல்கள்** | **3,005** | **3,660** | **345,498** | **413,885** |

(அ) இவ் வெளிபடுத்துகை ப.நா. நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லுகின்றது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**சரக்கு, துறைமுகம் மற்றும் வானூர்தி நிலையம் தொடர்பான பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் 2010இல் ஐ.அ.டொலர் 688 மில்லியனுக்கு 49.2 சதவீதத்தால் அதிகரித்தன.** இவ்வளர்ச்சிக்கு குறிப்பாக இப்பிராந்தியத்தில் பன்னாட்டு வர்த்தக அளவுகள் அதிகரித்தமையின் விளைவாக கொள்கலன் மாற்றிக் கப்பலேற்றல் கையாளலில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் விளைவாக கொழும்புத் துறைமுகத்தின் கொள்கலன் கையாளல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமை முக்கியமாக வழிவகுத்தது. உள்ளூர்த் துறைமுகங்களின் இயலளவில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு மற்றும் பன்னாட்டு வர்த்தகத்திலான மேம்பாடு என்பவற்றுடன் இத்துறை 2011இலும் அதற்கப்பாலும் மேலும் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பயணம் மற்றும் சுற்றுலா

**இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் மோதலுக்குப் பின்பான சமாதானச் சூழல் காரணமாக 2010இல் பலமாக மீள் எழுச்சியடைந்தது.** 2010இல் மொத்தச் சுற்றுலா வருகைகள் 654,476 ஆக விளங்கி 2004இல் பதிவு செய்யப்பட்ட முன்னைய உச்ச மட்டமான 566,202 வருகைகளை விஞ்சியது. நாட்டில் மேம்பாடடைந்த பாதுகாப்பு நிலைமை காரணமாக ஐக்கிய அமெரிக்க நாடு, ஐக்கிய இராச்சியம், சேர்மனி, அவுத்திரேலியா மற்றும் யப்பான் போன்ற சுற்றுலாப் பயணிகள் வரும் பிரதான நாடுகளால் வழங்கப்பட்ட அனைத்துப் பயண ஆலோசனைகளும் தளர்த்தப்பட்டமையாலும் சிறந்த பயண சேரிடங்களில் ஒன்றாக இலங்கை உள்ளதென உலகில் தரம் வாய்ந்த நிபுணர்களால் வழங்கப்பட்ட பாராட்டுக் காரணமாகவும் சுற்றுலா வருகைகள் கூர்மையான அதிகரிப்பை ஏற்படுத்தின. வருகைகளின் மிகக் கூடிய எண்ணிக்கை இந்தியாவிலிருந்தும் (126,882) அதைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (105,496), சேர்மனி (45,727), மாலை தீவு (35,791), அவுத்திரேலியா (33,456) மற்றும் பிரான்சிலிருந்தும் (31,285) பதிவு செய்யப்பட்டன. மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான சுற்றுலா வருகைகளும் அதிகரித்தன. இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் கிட்டத்தட்ட 78.9 சதவீதமானோர் விடுமுறை நோக்கங்களுக்காகவும், 12.7 சதவீதமானோர் வர்த்தக நோக்கத்துக்காகவும் 5.4 சதவீதமானோர் நண்பர்கள் மற்றும் உறவினர்களைக் காண்பதற்காகவும் 0.8 சதவீதம் மத ரீதியான மற்றும் கலாச்சார நோக்கங்களுக்காகவும் வருகை தந்திருக்கையில் 1.0 சதவீதமானோர் மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்காக வருகை தந்தனர்.

**சுற்றுலாவிலிருந்தான வருகைகள் 2009இன் ஐ.அ.டொலர் 350 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 576 மில்லியனுக்கு 64.6 சதவீதத்தால் அதிகரித்தன.** இலங்கை சுற்றுலாத் துறையை உயர் மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கு பாரிய விரிவான நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் சுற்றுலா வருகைகள் இவ்வாண்டில் தொடர்ச்சியாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை சுற்றுலா 2011ஆம் ஆண்டினை "இலங்கைக்கு விஜயம் செய்யுங்கள்" ஆண்டாகப் பிரகடனப்படுத்தி இருக்கின்றமையினால் நாட்டின் பன்முகப்படுத்தப்பட்ட கவரும் தன்மைகளை காட்சிப்படுத்தும் விதத்தில் 12 மாதங்களுக்கும் 12 சுற்றுலாத் தொனிப்பொருட்களை உள்ளடக்குகின்ற ஊக்குவிப்புப் பிரச்சாரமொன்றை ஆரம்பித்தது. பாசிக்குடா, அறுகம்குடா, திருகோணமலை, நிலாவெளி, வாகரை, வெருகல் மற்றும் கல்குடா போன்ற மிகப் பிரபல்யம் பெற்ற சுற்றுலா அமைவிடங்கள் சிலவற்றில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டன. கொழும்பிலும் அதேபோன்று சுற்றுப்புறங்களிலும் பன்னாட்டு ரீதியில் புகழ்பெற்ற பல சுற்றுலா விடுதிகளை அமைப்பதற்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டதுடன் ஏனைய புகழ்பெற்ற சுற்றுலா விடுதி தொடர்களைக் கவர்கின்ற செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இலங்கையைக் கவர்ச்சிகரமான கொள்வனவுச் சந்தையிடமாக நிலைநிறுத்தும் முன்மொழிவுகளுக்கு உதவும் விதத்தில் சீன நிறுவனமொன்று கொழும்பின் மத்தியில் பாரியளவு சுற்றுலா விடுதி/ பொருள் கொள்வனவுக் கட்டடத் தொகுதியில் முதலீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**2016இல் எதிர்பார்க்கப்படும் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுக்கு வசதியளிப்பதற்கு மேலும் முதலீடுகளை விரைவுபடுத்துவதற்கு பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** இலங்கைச் சுற்றுலா ஒரே கூரையின் கீழ் பொருட்களைக் கொள்வனவு செய்யும் கடையொன்றினை

**அட்டவணை 5.8** சுற்றுலாவின் செயலாற்றம்

| விடயம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (அ) | வளர்ச்சி வீதம் 2009 | வளர்ச்சி வீதம் 2010 (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகை | 559,603 | 494,008 | 438,475 | 447,890 | 654,476 | 2.1 | 46.1 |
| பொழுதுபோக்கு | 392,766 | 331,238 | 321,079 | 358,188 | 516,538 | 11.6 | 44.2 |
| வியாபாரம் | 96,981 | 52,116 | 37,261 | 38,473 | 83,270 | 3.3 | 116.4 |
| ஏனையவை | 69,856 | 110,654 | 80,135 | 51,229 | 54,668 | -36.1 | 6.7 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 5,794 | 4,940 | 4,166 | 4,076 | 5,825 | -2.2 | 42.9 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 47.8 | 46.2 | 43.9 | 48.4 | 70.1 | 10.3 | 44.8 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 42,586 | 42,571 | 37,094 | 40,133 | 65,018 | 8.2 | 62.0 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 76,100 | 86,175 | 84,598 | 89,605 | 99,344 | 5.9 | 10.9 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) | 133,558 | 145,238 | 123,134 | 124,970 | 132,055 | 1.5 | 5.7 |
| நேரடி | 55,649 | 60,516 | 51,306 | 52,071 | 55,023 | 1.5 | 5.7 |
| மறைமுகம் | 77,909 | 84,722 | 71,828 | 72,899 | 77,032 | 1.5 | 5.7 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

அமைத்திருக்கிறது. இங்கு சுற்றுலாவினை அபிவிருத்தி செய்வதற்கான பிரயோகங்கள் சிறப்புக் குழுவினால் செய்முறைப்படுத்தப்பட்டு அவை சுற்றுச் சூழலுக்கு முரணானது அல்லவெனின், இரண்டிலிருந்து மூன்று கிழமைக்குள் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. மத்திய அரசாங்கத்திலிருந்து மாகாணங்கள் வரை இலங்கைச் சுற்றுலாவின் அதிகாரத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் நிறுவன ரீதியான கட்டமைப்பினை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டும் கிழக்கு மாகாணத்தில் உள்ளூர் மயப்படுத்தப்பட்ட சுற்றுலா தொடர்பான உட்கட்டமைப்பினை உயர்த்தும் பொருட்டும் உற்பத்தியைக் கொண்டுள்ளதும் அவை உறுதியான சுற்றுலாவுடன் இணைந்துள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு வழங்கல் தொடர்களை விருத்தி செய்வதற்குமாக இலங்கைச் சுற்றுலா அமைச்சுடன் இணைந்து உலக வங்கியினால் நிதியிடப்படும் நிலைத்திருக்கக் கூடிய சுற்றுலா அபிவிருத்தி செயற்றிட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. மோதல்கள் முடிவடைந்துவிட்டமையின் காரணமாக அநேக வானூர்தி நிறுவனங்கள் கொழும்பிற்கான பறப்புக்களை மீளத் தொடங்கியுள்ளமையுடன் பல புதிய வானூர்தி நிறுவனங்களும் கடற்பயண ஏற்பாட்டாளர்களும் இலங்கையுடன் நெருங்கிய உறவுகளைத் தொடரும் ஆர்வத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் வியாபாரத்தின் பொருட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்களில் பெருமளவிற்கு தங்கியிருந்த இலங்கைச் சுற்றுலாத் தொழில்துறை, தற்பொழுது சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதற்கு இணையம் மற்றும் ஏனைய ஊடகத்தினூடாக நேரடியாக விளம்பரம் செய்வதில் பெருமளவு தங்கியுள்ளது. எனினும், இலங்கை "ஆசியாவின் அதிசயம்" என்ற இலக்கினை நனவாக்க வேண்டுமெனில், மோதலுக்குப் பின்னைய இலங்கையில் சுற்றுலாப் பயணிகளை பரந்தளவில் கவர்வதற்கு அரசாங்கமும் தனியார் துறையும் ஒருங்கிணைந்து தொழிற்படுவது அவசியமாகும்.

## தொடர்பூட்டல் பணிகள்

**தொடர்பூட்டல் பணிகள் இவ்வாண்டிலும் சிறப்பாகச் செயலாற்றியது.** தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான மொத்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் ஐ.அ.டொலர் 83 மில்லியனுக்கு 3.8 சதவீதத்தால் அதிகரித்தன. இது குரல் அழைப்புகளுக்கான பன்னாட்டு நேரடி அழைப்பு மீதான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் குத்தகைக்குப் பெறப்பட்ட சுற்றுகளூடாக தரவு கடத்தலுக்கான வாடகைப் பெறுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் உந்தப்பட்டது. மேம்பாடடைந்த தொழில்நுட்பத்துடன் தொடர்பூட்டல் பணிகளின் விரைந்த விரிவாக்கம் காரணமாக 2010இல் அகன்ற அலைவரிசை இணைய இணைப்புக்கள், செய்மதி மற்றும் கேபிள் தொலைக்காட்சியின் பயன்பாடு குறிப்பிடத்தக்களவில் மேம்பாடடைந்தது. மேலும், பன்னாட்டு நேரடி அழைப்புக்காக செல்லிட மற்றும் நிலையான இணைப்புக்களைக் கொண்ட தொழிற்பாட்டாளர்கள் இரு பிரிவினராலும் குறைந்த செலவில் அழைப்புக்கள் வழங்கப்பட்டமை இலங்கையிலிருந்து கூடிய பன்னாட்டு நேரடி அழைப்புக்களை மேற்கொள்வதற்கு ஊக்கமளித்ததன் மூலம் தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்களை இணையான வீதத்தில் அதிகரிக்கச் செய்தது.

## கணனி மற்றும் தகவல் பணிகள்

**கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத்துறை 2010இல் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டியது.** மென்பொருள்களின் ஏற்றுமதிகள், வியாபாரத்தை வெளிமூலங்களுக்குப் பணிகளை வழங்கும் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகள் என்பவற்றின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல்கள் 2010இல் ஐ.அ.டொலர் 265 மில்லியனுக்கு 8.2 சதவீதத்தால் அதிகரித்தன. இதேவேளை, பணிகள் கணக்கின் 'ஏனைய வியாபாரப் பணிகள்' என்பதன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அறிவுபூர்வ செயன்முறை மூலம் வெளியாட்களுக்கு பணிகளை வழங்கும் பேரிலான உட்பாய்ச்சல்களும் இவ்வாண்டில் கணிசமானளவில் அதிகரித்தன. பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் தொடர்ச்சியான முன்னேற்றத்தினை அவதானிக்குமிடத்து, முன்னணியிலுள்ள வெளிமூலங்களுக்குப் பணிகளை வழங்கும் மையங்களில் ஒன்றாக இலங்கை கூடியளவில் இனங் காணப்பட்டுள்ளமையால் உயர் வளர்ச்சி உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட துறைகளாக தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகள், வெளிமூலங்களுக்குப் பணிகளை வழங்குதல், அறிவுச் செயல்முறை மூலம் பணியை வழங்கல் கைத்தொழில்கள் விளங்குகின்றன. அரசாங்கமும் வரவு செலவுத்திட்ட மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் இத்துறையின் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கத்தை விரைவுபடுத்தும் பல எண்ணிக்கையான முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டுள்ளது. தேர்ச்சி பெற்ற மனித மூலதனத்தின் கிடைப்பனவுடன் உறுதியான அரசியல், சட்ட மற்றும் பொருளாதாரச் சூழல் கூடிய பெறுமதியுடைய வெளிமூலங்களுக்குப் பணிகளை வழங்கும் மற்றும் அறிவுச் செயல்முறை மூலம் பணியை வழங்கும் நிலையங்களை நிறுவுவதற்கு மிகவும் உகந்ததாக இருப்பதுடன் ஏனைய பிராந்திய நாடுகளுக்கு இலங்கையை அனர்த்த மீட்புத் தலமாகவும் தடங்கலற்ற வியாபாரத் தலமாகவும் இருப்பதற்கும் ஊக்குவிக்கிறது.

## வருமான உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்

வருமானக் கணக்கு 2009இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 488 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 572 மில்லியன் கொண்ட பற்றாக்குறையைப் பதிவு செய்தது. குறைவான பன்னாட்டு வட்டி வீதங்களுக்கு மத்தியிலும் உயர்மட்ட ஒதுக்குகளின் முதலீட்டிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி மற்றும் வெளிநாட்டு

நாணயம், வெளிநாட்டுப் பிணையங்கள் மற்றும் தங்கத்தை வர்த்தகம் செய்வதில் உழைக்கப்பட்ட இலாபங்கள் என்பன வருமானக் கணக்கிலான உட்பாய்ச்சல்களுக்குப் பங்களிப்புச் செய்தன. வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களின் பேரிலான உட்பாய்ச்சல்கள் 2010இல் ஐ.அ.டொலர் 307 மில்லியனுக்கு மூன்று மடங்காக அதிகரித்தன. எனினும், இது அரச மற்றும் தனியார்துறையின் நீண்ட, நடுத்தர மற்றும் குறுகியகால கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பால் எதிரீடு செய்யப்பட்டது. ஐ.அ.டொலர் 491 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுள் நீண்ட மற்றும் நடுத்தர கடன்கள் மீது அரசு, தனியார்துறைக் கம்பனிகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களால் செலுத்தப்பட்ட வட்டி 70 சதவீதத்திற்கு வகைகூறின. வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் வீழ்ச்சி ஏற்பட்டமையால் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் மீதான தேறிய வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. இதேவேளை, நேரடி முதலீடுகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் வெளிநாட்டுத் தொழில்முயற்சிகள் இலாபங்கள் மற்றும் பங்கு இலாபங்களை தாய் நாட்டிற்கு அனுப்பியதன் காரணமாக ஐ.அ.டொலர் 386 மில்லியனுக்கு 67.8 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், தாய் நாட்டுக்கு அனுப்பப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கு இலாபங்களின் கணிசமான பகுதி தற்போதைய தொழிற்பாடுகளின் விரிவாக்கத்திற்காக வெளிநாட்டு தொழில் முயற்சிகளால் மீள முதலீடு செய்யப்பட்டன.

### நடைமுறை மாற்றல்கள்

**தேறிய நடைமுறை மாற்றல்கள் 2009இன் ஐ.அ.டொலர் 3,005 மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 3,660 மில்லியனுக்கு கணிசமானளவில் அதிகரித்தன.** உள்முக தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் 2010இல் மிகக் கூடிய வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராக தொடர்ந்து விளங்கியது. நடைமுறை மாற்றல்களில் பெரும் பகுதிக்கு வகைகூறிய உள்முக தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் பெரும்பாலும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பாக பின்பற்றப்பட்ட சாதகமான கொள்கைகள் காரணமாக 2009இன் ஐ.அ.டொலர் 3,330 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,116 மில்லியனுக்கு 23.6 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. உயர் கூலிகள் மற்றும் சம்பளங்களுக்காக இலங்கை அதிகாரசபைகள் தொழில்தருநர்களுடன் கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை, வர்த்தக வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட செலாவணி, இவ்வலையமைப்பின் விரிவாக்கம், உயர் வருவாய்கள் கொண்ட வெளிநாட்டுத் தொழில்களை எடுப்பதற்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் புலம்பெயர்வுக்கு ஊக்கமளித்தல், புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதனூடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முறைசார்ந்த வழிமுறைகள் மற்றும் நிதியியல் நுழைவினூடாக உள்முக பணவனுப்பல்களை ஊக்குவிப்பதற்கான அரசாங்கத்தின் தற்போதைய முன்னெடுப்பு என்பன உயர்மட்ட தொழிலாளர் பணவனுப்பல்களைக் கவர்வதற்கு கருவியாக அமைந்தன. மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள்நிர்மாணம் மற்றும் புதிய வாழ்வாதாரங்களை நிறுவுவதற்கான பணவனுப்பல் உட்பாய்ச்சல்களும் உள்நோக்கிய தொழிலாளர்களின் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. குறிப்பாக மத்திய கிழக்குப் பிராந்தியம் உள்ளிட்ட பணவனுப்பல்களை அனுப்புகின்ற பல முக்கிய நாடுகளின் பொருளாதார மீட்சி 2010இல் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான கேள்வியில் அதிகரிப்பை ஏற்படுத்தியது.

### நடைமுறைக் கணக்கு மீதி

**நடைமுறைக் கணக்கு 2010இல் ஐ.அ.டொலர் 1,418 மில்லியன் கொண்ட பற்றாக்குறையை அல்லது மொ.உ.உற்பத்தியில் 2.9 சதவீதத்தினைப் பதிவு செய்தது.** உள்நாட்டுக் கேள்வியின் மீட்சி மற்றும் பொருளாதாரச் செயற்பாட்டின் விரிவாக்கத்தால் உதவப்பட்ட அதிகரித்த இறக்குமதிக் கேள்வியின் விளைவாக ஏற்பட்ட பாரிய வர்த்தகப் பற்றாக்குறை காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்தது. குறிப்பாக, உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான முதலீட்டுப் பொருட்களின் கேள்வி இவ்வாண்டில் அதிகரித்தது. இதேவேளை, பணிகள் மற்றும் தனியார் பணவனுப்பல்கள் வடிவில் நடைமுறைக் கணக்குக்கான கணிசமான உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த உதவியது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2010இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2.9 சதவீதமாக விளங்கியது. இது 2009ஐத் தவிர முன்னைய சில ஆண்டுகளின் சராசரிப் பற்றாக்குறையை விட மிகவும் குறைவாகக் காணப்பட்டது. அவ்வாண்டில் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதமாக விளங்கி உலக மந்த நிலையின் பின்னணியில் நலிவடைந்த உலக மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரக் கேள்வியை பிரதிபலித்தது.

## 5.5 மூலதன, நிதியியல் பாய்ச்சல்களும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு நேரடி முதலீடு

2010இல் கடன்கள் உள்ளடங்கலாக அடையப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு பெரும்பாலும் வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களில் உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தாக்கம் காரணமாக **2009இன் ஐ.அ.டொலர் 601**

## சிறப்புக்குறிப்பு 10 உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்களிலான போக்குகளும் இலங்கைக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்த்தலும்


வெளிநாட்டு நேரடி முதலீடு (வெநேமு) என்பது நாட்டின் மொத்த முதலீட்டை அதிகரிப்பதற்கு உதவும் நீண்ட கால மற்றும் படுகடனை உருவாக்காத நிதியியல் பாய்ச்சலாகும். ஏனைய மூலதனப் பாய்ச்சல்களைப் போலன்றி வெ.நே.முதலீடு முகாமைத்துவ மற்றும் சந்தைப்படுத்தல் தேர்ச்சிகள் போன்றவற்றூடாக தொழில்நுட்பத்தை மாற்றல் மனித மூலதனத்திலான அபிவிருத்தி போன்ற பல விருப்பத்துக்குரிய பண்புகளை உள்ளடக்குகிறது. மேலும் வெ.நே. முதலீடு தொழில் வாய்ப்புக்கள் மற்றும் புதிய சந்தைகளை உருவாக்கும் அதேவேளை உலகளாவிய ஒருங்கிணைப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப ரீதியாக புதியதைக் கண்டுபிடித்தல் என்பவற்றை வசதிப்படுத்த உதவுகிறது.

### பன்னாட்டு வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்களின் போக்குகள்

கடந்த தசாப்தத்தில், உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்பின் முக்கிய வழிமுறையாக வெ.நே.முதலீட்டு உட்பாய்ச்சல்கள் உத்வேகமடைந்தன. மூலதனப் பாய்ச்சல்களிலான இவ் அதிகரிப்பு பெரும்பாலும் பலம் வாய்ந்த உலகளாவிய பொருளாதார வளர்ச்சி: நீடித்து நிலைத்திருக்கும் குறைந்த வட்டி வீதங்கள் காரணமாக போதியளவு உலக திரவத்தன்மையால் உதவப்பட்ட சாதகமான நிதியியல் நிலைமைகள்: அதிகரித்துச் செல்லும் பொருட்களின் விலைகள்; வெ.நே. முதலீட்டுப் பெறுனர்களின் நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட சந்தையை நோக்காகக் கொண்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்பவற்றால் ஏற்பட்டது. 2007 இல் உலகளாவிய நிதியியல் நெருக்கடி உச்சநிலையை அடைவதற்கு முன்பு உலகளாவிய வெ.நே.முதலீட்டு உட்பாய்ச்சல்களில் ஐ.அ.டொலர் 2.1 ரில்லியன் முன்னெப்போதுமில்லாத அதிகரிப்பு காணப்பட்டதுடன் இது 2000 இல் நே.வெ.முதலீட்டு உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் 50 சதவீத அதிகரிப்பாகும். மேலும், கடந்த தசாப்தம் தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் கவர்ச்சிகரமான வளர்ச்சி காணப்பட்டமை உலகம் முழுவதும் வெ.நே முதலீட்டுப் பிணைப்புகளில் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்தியது. இத் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களிலிருந்தான வெ.நே.மு பாய்ச்சல்கள் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களுக்கான உட்பாய்ச்சல்களின் கணிசமான பங்கைக் கொண்டிருந்த போதிலும் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் உலகளாவிய வெ.நே. முதலீட்டு உட்பாய்ச்சல்களைத் தீர்மானிப்பதில் தொடர்ந்து முக்கிய பங்கை வகிக்கின்றன. எனினும், அனைத்து முக்கிய முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் பொருளாதாரச் செயற்பாட்டுக்குத் தடை ஏற்படுத்திய உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் கடுமையான தாக்கம் வெ.நே. முதலீட்டுப் பாய்ச்சல்களின் அதிகரித்துச் செல்லும் போக்கை பெருமளவில் நேர்மாறாக்கியது. உதாரணமாக அங்ராட்[1] புள்ளிவிபரத்தின்படி, உலகளாவிய வெ.நே. முதலீட்டுப் பாய்ச்சல்கள் 2008 இல் ஐ.அ.டொலர் 1.8 ரில்லியனுக்கு 16 சதவீதத்தாலும் 2009 இல் ஐ.அ.டொலர் 1.1 ரில்லியனுக்கு 37 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. வரைபடம் 10.1 இல் வெளிப்படுத்தப்பட்டவாறு, அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தி அடைந்துவரும் மற்றும் மாறும் நிலையிலுள்ள பொருளாதாரங்கள் ஆகிய அனைத்து முக்கிய குழுக்களில் வெ.நே.முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2009 இல் கூர்மையாக வீழ்ச்சியடைந்து உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக உலகம் முழுவதிலும் நலிவான பொருளாதாரச் செயலாற்றத்தைப் பிரதிபலிக்கின்றன.

[1] வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாடு


**வரைபடம் சி.கு.10.1 பொருளாதார குழுக்களின்படி வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலகள், 2000 - 2009**




மூலம்: யுஎன்சிரிஏடி வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் தகவல்த்தொகுப்பு (http://www.unctad.org/fdistatistics)

உலக முதலீட்டு அறிக்கையின் (2010) படி, 2009இல் வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களிலான கூர்மையான வீழ்ச்சி பங்கு முதலீடுகள், மீள் முதலீடு செய்யப்பட்ட வருவாய்கள் மற்றும் ஏனைய மூலதனப் பாய்ச்சல்கள் (பிரதானமாக கம்பனிகளுக்குள்ளேயான கடன்கள்) என்பவற்றைக் கொண்டுள்ள அனைத்து வெநே முதலீட்டுக் கூறுகளிலும் புலப்படுகிறது. குறிப்பாக, 2009இல் நலிவடைந்த எல்லை கடந்த இணைப்புக்கள் மற்றும் கையேற்புகள் காரணமாக பங்கு முதலீடுகள் குறைவடைந்தமை நிதியியற் சந்தைகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நிதியிடலில் சுருக்கத்தைப் பிரதிபலிக்கிறது. இத்துடன், நாட்டின் எல்லைகளுக்கு அப்பாலுள்ள கூட்டுத்தாபனங்களின் இலாபங்களின் கணிசமான சுருக்கம் காரணமாக மீள்நிதியிடப்பட்ட வருவாய்களும் அவற்றின் உள்ளக மூலவளங்களில் பற்றாக்குறையை ஏற்படுத்தின. மேலும், 2009இல் வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களிலான வீழ்ச்சி வியாபாரச் சுற்று வட்டங்களுக்குக் (உந்துருளி மற்றும் இரசாயனக் கைத்தொழில்கள் போன்றவை) கூடிய உணர்திறன் கொண்ட கைத்தொழில்களில் மட்டுமன்றி முதன்மை, தயாரிப்பு மற்றும் பணிகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் வெளிப்படையாகக் காணப்பட்டன[2]. இதேவேளை, 2010இல் இலங்கைக்கான வெநே முதலீட்டின் உட்பாய்ச்சல்கள் 2009இன் ஐ.அ.டொலர் 601 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 516 மில்லியனுக்கு 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. உலகளாவிய நிதியியல் பாய்ச்சல்கள் மீதான நிதியியல் நெருக்கடியின் பாதகமான விளைவுகள் காணப்படுமிடத்து அத்தகைய குறைப்பை முழு அளவில் எதிர்பார்க்க முடியாது.

**வரைபடம் சி.கு.10.2 இலங்கையில் துறைவாரியான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உள்ளடக்கம் 2010**




மூலம் : இலங்கை முதலீட்டுச் சபை


[2] வேளாண்மை, மீன்பிடி, சுரங்கமகழ்தல், காடாக்கல், கல்லுடைத்தல், பெற்றோலியம் மற்றும் ஏனையவையை முதன்மைத் துறை உள்ளடக்கிறது

2010இல் இலங்கையின் வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களின் 59 சதவீதம் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கும் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைக்கு முறையே 31 சதவீதமும் 9 சதவீதமும் வந்திருப்பதையும் வேளாண்மைத்துறைக்கு சிறிதளவே வந்திருப்பதையும் தரவு வெளிப்படுத்துகிறது (வரைபடம் சி10.2).


**முக்கிய வெநே முதலீட்டுப் பெறுநர்களாக அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் மாறிச் செல்லும் பொருளாதாரங்களின் தோற்றம்**

கடந்த சில ஆண்டுகளில், அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களுக்கான வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்கள் கூர்மையாக வீழ்ச்சியடைந்திருக்கையில் அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் மாறிச் செல்லும் பொருளாதாரங்கள் சார்பு ரீதியில் சிறப்பாகச் செயலாற்றின (வரைபடம் சி10.3). அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களுக்கான வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2009இல் வியப்பிற்குரிய 44 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்திருக்கையில் அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் மாறிச் செல்லும் பொருளாதாரங்கள் 24 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை மட்டுமே பதிவு செய்தன. அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களுக்கான வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களிலான சார்பு ரீதியிலான சிறிய வீழ்ச்சி முக்கியமாக கடந்த ஆண்டுகளில் அதிகரித்துச் செல்லும் வளர்ச்சி வாய்ப்புக்கள் மற்றும் அதிகரித்த நிதியியல் திறந்த தன்மையை நோக்கிய சந்தையை நோக்காகக் கொண்ட சீர்திருத்தங்களால் ஏற்பட்டிருக்கலாம். அங்ராட் தரவின்படி அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் மாறிச் செல்லும் பொருளாதாரங்கள் இரண்டும் சேர்ந்து 2009இல் உலகளாவிய வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களின் அரைவாசிக்கு வகைகூறின (வரைபடம் சி10.4). மேலும், அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் மாறிச் செல்லும் சில பொருளாதாரங்கள் 2009 அளவில் உலகளாவிய தரமிடல்களில் முதல் 20 வெநே முதலீட்டுப் பெறுநர்களிடையே வரக்கூடியதாக இருந்தது. இதில் சீனா வெநே முதலீட்டு சேருமிடத்தின் இரண்டாவது பிரபல்யமான நாடாக வந்திருக்கையில் ஐக்கிய அமெரிக்கா பட்டியலில் முதலாவதாக வந்துள்ளது (வரைபடம் சி10.5). இத்துடன், மிகப் பெரிய வெநே முதலீட்டு சேருமிடங்களுள் இந்தியா, பிரேசில், ரூசியக் கூட்டமைப்பு, சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் என்பவற்றின் பிரசன்னம் அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் மாறிச் செல்லும் பொருளாதாரங்கள் தோற்றம் பெறுவதை உறுதிப்படுத்தியிருக்கையில் 2009இல் சில ஐரோப்பிய நாடுகளின் தரமிடல்கள் வீழ்ச்சியடைந்தன. கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட இன்னுமொரு ஆர்வத்துக்குரிய அபிவிருத்தி யாதெனில் தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களிலிருந்தான முதலீட்டாளர்கள் தோற்றம் பெற்று வரும் ஏனைய பொருளாதாரங்களில் முதலீடு செய்வதை பெரிதும் விரும்புகின்றனர் என்பதாகும். உதாரணமாக, தோற்றம் பெற்று


வரைபடம் சி.கு.10.3 பன்னாட்டு வெளிநாட்டு நேரடி முதலீடு உட்பாய்ச்சல்களிலுள்ள பங்குகள் 2000 - 2009




வரைபடம் சி.கு.10.4 பன்னாட்டு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் பங்குகள் 2009




வரைபடம் சி.கு.10.5 பன்னாட்டு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களில், முன்னிலையிலுள்ள 20 பெறுனர்கள், 2008-2009*




மூலம்: யுஎன்சிரிஏடி வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் தகவல்த்தொகுப்பு (http://www.unctad.org/fdistatistcs)

*2009 வெளிநாட்டு நேரடி முதலீடு உட்பாய்ச்சல்கள் தகவல்களை அடிபடையாகக் கொண்டு தரப்படுத்தப்பட்டது

வரும் பொருளாதாரங்களின் முதலீட்டு உட்பாய்ச்சல்களின் 50 சதவீதத்திற்கும் கூடுதலானவை (இணைப்புக்கள் மற்றும் கையேற்றல் நியதிகளில்) 2010இன் முதலரைப் பகுதியில் தோற்றம் பெற்று வரும் ஏனைய பொருளாதாரங்களுக்கு அனுப்பப்பட்டன (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு, முதலீட்டுச் செய்திகள் 2010 நவெம்பர்).

உலகப் பொருளாதாரத்திலான மிதமான மீட்சியால் உதவப்பட்டு 2009இன் பின்னரைப் பகுதியிலிருந்து குறைவாக இருந்த உலகளாவிய வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்கள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியதை அண்மைய தரவு எடுத்துக் காட்டுகிறது. அதிகரித்துச் செல்லும் கம்பனி இலாபங்கள், உலக பங்குச் சந்தைச் செயலாற்றத்திலான மேம்பாடுகள் மற்றும் நிதியியல் திறந்த தன்மையை மேம்படுத்தும் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தல் இவ்வபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தன. உலக முதலீட்டு அறிக்கையின்படி (2010), உலகளாவிய வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 1.1 ரில்லியனிலிருந்து 1.3 ரில்லியனுக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2011 மற்றும் 2012இற்கான எறிவுகள் முறையே ஐ.அ.டொலர் 1.3 - 1.5 ரில்லியனாகவும் ஐ.அ.டொலர் 1.6-2.0 ரில்லியனாகவும் காணப்பட்டன.

முக்கியமாக, நெருக்கடிக்கு முன்பான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட உலகப் போக்குகள் அடுத்த சில ஆண்டுகளிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, அபிவிருத்தி அடைந்து வரும் மற்றும் மாறிச் செல்லும் பொருளாதாரங்கள் ஏனைய நாடுகளிடையே சீனா, பிரேசில் மற்றும் இந்தியாவுடனான பிரதான வெநே முதலீட்டு சேருமிடங்களாக முன்னணியில் இருக்குமென

எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பிரேசில், ரூசியா, இந்தியா மற்றும் சீனாவின் பொருளாதாரங்கள் ஏற்பாட்டு நாடுகளாகவும் அது போல் பயன்படுத்தும் நாடுகளாகவும் விளங்கி உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் மீட்சியை அடைவதில் பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்தன. உலக முதலீட்டு வாய்ப்புக்கள் அளவீடு - 2010/2012, இன்படி பிரதானமாக அபிவிருத்தியடைந்து வரும் ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்க உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கூடியளவு வெநே முதலீட்டை கவருமென எதிர்பார்க்கப்படுகையில் வெநே முதலீட்டு வளர்ச்சி வாய்ப்புக்கள் தயாரிப்புத் துறையை விட முதன்மை மற்றும் பணிகள் துறைக்கு உயர்ந்தளவில் இருக்குமென கருதப்படுகிறது.

**இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வாய்ப்புக்கள்**

வெளிநாட்டு முதலீட்டாளர் மனோபாவத்தை மோசமாகப் பாதித்த நீண்ட காலமாகவிருந்த உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்ததன் மூலம், வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களிலிருந்து முழு அளவில் நன்மையடைவதற்கு இலங்கைக்கான உள்ளார்ந்த வளங்கள் எவை?; அத்தகைய வெநே முதலீட்டு வளர்ச்சி வாய்ப்புக்களை அடைவதைத் தடுக்கும் தற்போதுள்ள தடைகள் எவை?; அத்தகைய தடைகளை எதிர்கொள்வதற்கு ஏற்கனவே எடுக்கப்பட்ட வழிமுறைகள் எவை?; இன்னும் செய்யப்பட வேண்டியவை எவை?

உலகளாவிய வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களின் மீட்சியடைந்து வரும் போக்குகளின் பின்னணியில் இனிவரும் ஆண்டுகளில் பணிகள் மற்றும் வேளாண்மைத் துறைகளுக்கான வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களின் மேம்பாட்டுக்கு இலங்கை கணிசமான எதிர்கால வாய்ப்பு வளத்தைக் கொண்டுள்ளது. உலக முதலீட்டு வாய்ப்புக்களின் அளவீடு - 2010/ 2012 வெளிப்படுத்துகைகளின்படி இனிவரும் ஆண்டுகளில் முதன்மை மற்றும் பணிகள் துறைகளுக்கான வெநே முதலீட்டு வளர்ச்சி வாய்ப்புக்கள் உயர்வாக இருக்கும். மோதலுக்குப் பின்பான காலப்பகுதியில் சுற்றுலாவை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கை ஏற்கனவே ஈடுபட்டுள்ளமையால் சுற்றுலா தொடர்பான வெநே முதலீட்டை மேலும் பலப்படுத்த வேண்டும். இதேவேளை, நடுத்தர காலப்பகுதியிலிருந்து நீண்ட காலப்பகுதியில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட்டு கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளுக்குக் கூடிய வெநே முதலீடுகளை ஈர்க்க வேண்டும்.

இலங்கையின் உள்ளார்ந்த வளம் மிக்க முதலீட்டுத் துறையான வேளாண்மைத் துறை இதுவரை பெருமளவில் ஆராயப்படவில்லை. வேளாண்மைத்துறையில் முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கு பன்னாட்டு நிறுவனங்களிடையே வளர்ச்சியடைந்து வரும் ஆர்வம் காணப்படுகிறது. ஏனெனில், உலகக் குடித்தொகை வளர்ச்சி (2012 அளவில் 7 பில்லியனையும் 2050 அளவில் 9 பில்லியனையும் அடைகிறது) தொடர்பாக ஐக்கிய நாடுகளின் எதிர்வு கூறுகளின்படி இந்நிறுவனங்கள் ஓரளவு அச்சுறுத்தல்களை எதிர்பார்ப்பதாலாகும். உலகக் குடித்தொகை வளர்ச்சியின் அத்தகைய எறிவுகள் குறிப்பாக காணி மற்றும் நீரின் பற்றாக்குறை அதிகரித்துச் செல்லல் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் எந்தவொரு பாதகமான தாக்கங்களின் பின்னணியில் கடுமையான கொள்கைச் சவால்களைச் சுட்டிக் காட்டுகின்றன. இதேவேளை, தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் மற்றும் காபன் குறைந்த கைத்தொழில்கள் போன்ற துறைகளில் கூடிய கவனம் செலுத்துவதற்காக வெநே முதலீட்டை நெறிப்படுத்துவதன் மூலம் தயாரிப்புத் துறையின் உள்ளார்ந்த வளத்தையும் அதிகரிக்கலாம். இது, இத் துறைகளுள் மாறிச் செல்லும் கம்பனிகளிடையே வளர்ச்சியடைந்து வரும் ஆர்வம் இருப்பதால் மட்டுமன்றி நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சியை அடைவதற்கு முக்கியமான உற்பத்தித்திறன் இயலளவின் விரிவாக்கத்தை வசதிப்படுத்துவதுடன் ஏற்றுமதிப் போட்டித்தன்மையையும் தரமுயர்த்தும்.

இவ் வெநே முதலீட்டு வாய்ப்புக்களை அடைவதற்கான அத்தியாவசியமான தேவைப்பாடுகள் ஒரு பக்கத்தில் உலகப் பொருளாதாரத்தின் பாரிய வளர்ச்சி வாய்ப்புக்கள், மாற்றமடையும் கூட்டுத்தாபனங்களின் அதிகரித்துச் செல்லும் கம்பனி இலாபங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த உலகப் பங்குச் சந்தைச் செயலாற்றாத்தாலும் மறுபக்கத்தில் முதலீட்டு நிருவாகத்தை மேலும் தாராளமயமாக்குவதற்கு எடுக்கப்பட்ட கொள்கை முன்னெடுப்புக்களுடன் இணைந்து உள்நாட்டில் பேரண்டப் பொருளாதாரச் சூழலைப் பலப்படுத்துவதன் மூலமும் உதவப்பட்டன. நிதியியல் திறந்த தன்மையை ஊக்குவிப்பதற்கும் முதலீட்டுச் சூழலை அதிகரிப்பதற்கும், செலவுமிக்க வரிச் சலுகைகள், குறைந்த செலவில் தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்குதல் போன்ற கூடியளவுக்கு மரபுவழி முறைகளுக்கும் அப்பால் நகர்வதற்கும் இலங்கை பல முன்னேற்றகரமான வழிமுறைகளை மேற்கொண்டது. அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாடு, முன்னேற்றமடைந்த உட்கட்டமைப்பு, குறைந்த வரி அமைப்பு, தேர்ச்சி பெற்ற தொழிலாளர், வினைத்திறன் மிக்க அரச நிறுவனங்கள் போன்ற பல காரணிகளால் உதவப்பட்டு கொள்கையின் கவனம் பொருத்தமான முதலீட்டு ஊக்குவிப்பு உபாயத்தை நடைமுறைப்படுத்துவதை நோக்கி நகர்த்தப்பட்டது. குறிப்பாக, மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் சில முக்கிய தளர்த்தல்களை அண்மையில் அறிவித்த வேளையில், உபாய முதலீட்டுச் சட்டம் போன்ற முதலீட்டாளர் சிநேகபூர்வமான சூழலை வசதிப்படுத்தும் பொருட்டு பல்வேறு சட்டவாக்கங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எனினும், உலகப் பொருளாதார மீட்சி எளிதில் உடையும் நிலையிலுள்ளதால் உலகம் முழுவதும் வெநே முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றி ஓரளவு கரிசனைகள் தற்போதும் காணப்படுகின்றன. மேலும், இங்கு கவனிக்கக் வேண்டிய விடயம் யாதெனில் தாராளமயமாக்கல் கொள்கைகள் நிச்சயமாக வெநே முதலீட்டு உட்பாய்ச்சல்களுக்கு உதவும் அதேவேளை வெநே முதலீட்டைப் பெறும் நாடுகளிடையேயான கடுமையான போட்டிச் சூழல் சவாலாக அமையும். நிதியியல் முறைமை மற்றும் செலாவணி வீதங்களிலான உறுதிப்பாடு, சாதகமான பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் இறைத்திரட்சி என்பவற்றுக்கு இட்டுச் செல்லும் உண்மை, வெளிநாட்டு, நாணய மற்றும் இறை என்பற்றை உள்ளடக்கும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளின் பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றக் குறிகாட்டிகளைத் தரமுயர்த்துவதற்கு வலியுறுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

**உசாத்துணை**


உலக முதலீட்டு அறிக்கை (2010), வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு, ஐக்கிய நாடுகள்.

உலக முதலீட்டு வாய்ப்புக்கள் அளவீடு - 2010/ 2012(2010), வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு, ஐக்கிய நாடுகள்

பொஒஅஅ முதலீட்டுச் செய்திகள் (2010), பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்திக்கான அமைப்பு, நவெம்பர், 14வது வெளியீடு

**மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 516 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** வெளிநாட்டு நேரடி முதலீடு நீண்டகாலத் தன்மை கொண்டதால் வெளிநாட்டு மூலதனம் மற்றும் படுகடன் உட்பாய்ச்சல்களில் உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தாக்கம் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும், வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள் முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீட்சிக்கான அறிகுறிகளை எடுத்துக்காட்டியது. 2010இல் ஐ.அ.டொலர் 110 மில்லியன் கொண்ட மிகக் கூடிய வெளிநாட்டு நேரடி முதலீட்டினை இந்தியாவும் அதைத் தொடர்ந்து ஐ.அ.டொலர் 72 மில்லியனை மலேசியாவும் ஐ.அ.டொலர் 66 மில்லியனை ஐக்கிய அரபுக் குடியரசும் பதிவு செய்தன. முன்னைய ஆண்டுகளில் காணப்பட்டவாறே 2010இலும் தொலைத் தொடர்பூட்டல் கைத்தொழில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலில் அநேகமானவற்றைக் கவர்ந்தது. 2010இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 44 மில்லியன் கொண்ட மூலதனப் பங்கு, பங்குடமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 112 மில்லியன் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், ஐ.அ.டொலர் 126 மில்லியன் கொண்ட கம்பனிக்குள்ளேயான கடன்பாடு, ஐ.அ.டொலர் 39 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள், ஏற்கனவேயுள்ள கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 195 மில்லியன் கொண்ட வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீடு என்பவற்றை உள்ளடக்குகின்றன. இதேவேளை, வெளிநாட்டு நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் 2009இன் ஐ.அ.டொலர் 20 மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 43 மில்லியனுக்கு அதிகரித்தன. இதன் காரணமாக, 2010இல் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2009இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 581 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 473 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. 2009 உடன் ஒப்பிடுகையில் 2010இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டுக் கடப்பாடு, ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்புடன் புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அடைவதற்கான எதிர்கால வாய்ப்புக்களை எடுத்துக்காட்டும் விதத்தில் அதிகரித்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் நீண்டகாலத் தன்மை வாய்ந்ததாகவும், குறிப்பாக, நெருக்கடி நிலைமையில் சடுதியான மீள்பெறுகையின் இடர்நேர்வைக் குறைக்கின்ற விதத்தில் குறைந்தளவிலான தளம்பலுறும் தன்மையைக் கொண்டிருந்த போதிலும் அதே காரணத்தைப் பிரதிபலித்து உள்முக வெளிநாட்டு நேரடி முதலீடு உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தாக்கத்திலிருந்து மீட்சியடைவதற்கு நீண்ட காலத்தை எடுக்கிறது.

### அரசிற்கான நடுத்தர மற்றும் நீண்டகால மூலதனம்

**அரசிற்கான நடுத்தர மற்றும் நீண்டகால மூலதனம் 2009 உடன் ஒப்பிடுகையில் 2010இல் அதிகரித்தது.** ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டுக்கான முறியின் பெறுகைகள் மற்றும் கொடைகள் நீங்கலாக அரசுக்கான நீண்டகால கடன் உட்பாய்ச்சல்கள் 2009இன் ஐ.அ.டொலர் 1,280 மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 1,460 மில்லியனுக்கு அதிகரித்தன. 2010இலான உயர் வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் நடைபெற்று வரும் செயற்றிட்டங்களுக்கான விரைந்த பகிர்ந்தளிப்பைப் பிரதிபலித்ததன் விளைவாக வெளிநாட்டு உதவியின் பயன்பாட்டு வீதம் 2009இன் 24.1 சதவீதத்திலிருந்து 2010இல் 24.8 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது[1]. கடன் உட்பாய்ச்சல்கள் அநேகமாக மகம்புரவிலுள்ள மகிந்த ராஜபக்ஷ துறைமுகம், கொழும்புத் துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம் மற்றும் தெற்கு அதிவிரைவுப் பாதையின் நிருமாணச் செயற்றிட்டம் போன்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை நோக்கி நெறிப்படுத்தப்பட்டன. ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட இலங்கையின் மூன்றாவது நாட்டுக்கான பன்னாட்டு முறி 2010 ஒத்தோபரில் வெற்றிகரமாக வழங்கப்பட்டது. வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகையை விட ஆறு தடவைகளுக்கு மேலாக உதவப்பட்டமை இலங்கைப் பொருளாதாரம் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. இயல்பாகவே நடைமுறை மற்றும் மூலதனம் இரண்டையும் உள்ளடக்கும் கொடைகளின் மொத்தப் பெறுகை 2009இன் ஐ.அ.டொலர் 221 மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 150 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

### அரசுக்கான குறுங்கால மூலதனம்


**2010இல் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பேரிலான தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 531 மில்லியனாக விளங்கின.** இதன்படி, வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட அரச பிணையங்களின் வெளிநின்ற பெறுமதி, அரச பிணையங்களின் வெளிநின்ற மொத்தப் பெறுமதியின் 10 சதவீதம் கொண்ட உச்ச மட்டத்தை அடைந்தது. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை மீதான எந்தவொரு தேவையற்ற அழுத்தத்தையும் தவிர்க்கும் பொருட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சடுதியான மீளப்பெறுகைகளை குறைப்பதற்கும் வசதிப்படுத்துவதற்கும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மீதான அனைத்து உட்பாய்ச்சல்களும் மத்திய வங்கியால் உள்வாங்கப்பட்டன.

### தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நீண்டகால மூலதனம்

**தனியார் துறைக்கான வெளிநாட்டுக் கடனின் உட்பாய்ச்சல்கள் 2010இல் ஐ.அ.டொலர் 580 மில்லியனுக்கு 48.7 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தன.** இதற்கு புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்றிட்டத்துக்காக எக்சிம் பாங்

[1] வெளிநாட்டு உதவி பயன்பாட்டு வீதம் என்பது 2010 காலப் பகுதியில் வழங்கப்பட்டவையில் 2010 யூன் இறுதியில் ஒதுக்கப்பட்ட வழங்கப்படாத மீதியின் விகிதம்.

**வரைபடம் 5.10 மூலதனம் மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள்**




ஒவ் சீனாவிலிருந்து லங்கா கோல் கம்பனி லிமிடெட்டுக்கு வந்த ஐ.அ.டொலர் 450 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்களே காரணமாகும். எனினும், முதலீட்டுச்சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடனின் உட்பாய்ச்சல்கள் 2009இன் ஐ.அ.டொலர் 197 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 39 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டில் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றன. 2010இல் தனியார் துறையால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்பாடுகள் பெரும்பாலும் தொலைத் தொடர்பூட்டல், வலு மற்றும் சக்தி ஆகிய துறைகளுக்கானவையாகும். உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி மற்றும் சாதகமான முதலீட்டாளர் மனோபாவங்கள் 2011இலும் அதற்கப்பாலும் தனியார் துறைக்கான பாரிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுக்கான உந்துவிசையை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான குறுகியகால மூலதனம்

**தனியார்துறைக்கான குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் சொத்துப்பட்டியல் முதலீடுகள், வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலான மாற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.** குறுகியகால தேறிய மூலதன வெளிப்பாய்ச்சல்கள் 2009இன் ஐ.அ.டொலர் 311 மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 198 மில்லியனுக்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன. இது பெரும்பாலும் 2010இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பாரிய எண்ணெய் இறக்குமதிக் கொடுகடனின் மீள்கொடுப்பனவைப் பொருட்படுத்தாது 2010இல் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் ஏற்பட்டது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2009இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 1,582 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010இல் எண்ணெய் இறக்குமதிகளுக்கான ஐ.அ.டொலர் 968 மில்லியன் கொண்ட ஈரானின் கொடுகடன் வசதி உள்ளடங்கலாக ஐ.அ.டொலர் 1,490 மில்லியன் கொண்ட தேறிய வர்த்தகக் கொடுகடன்களைப் பெற்றதுடன் 2010இல் ஐ.அ.டொலர் 1,300 மில்லியனைத் தீர்ப்பனவு செய்தது.

**2009இன் ஐ.அ.டொலர் 375 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010இல் கொழும்பு பங்குச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 819 மில்லியன் கொண்ட அதிகரித்த மொத்த வெளிநாட்டு**

**அட்டவணை 5.9 2010இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன்வழங்குநரும் செயற்றிட்டமும் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர்கள் மில்லியன் |
|---|---|
| **ஏபி செவன்ஸ்க் ஏற்றுமதிக் கடன் கூட்டுத்தாபனம்** | **28.5** |
| இதில்; இரத்மலானை, ஜா-எல கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் செயற்றிட்டம் | 19.0 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **306.3** |
| இதில்; கொழும்பு துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம் | 72.3 |
| தனியார் துறை அபிவிருத்திக்கான நிதிச் சந்தைகள் | 40.0 |
| தேசிய அதிவேகப்பாதைத் துறைச் செயற்றிட்டம் | 35.4 |
| தென்மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் - இணைப்பு | 18.7 |
| **கலியோன் கிரடிட் அக்றிகோல்** | **17.1** |
| இதில்; விமலசுரேந்திர மற்றும் புதிய லக்சபான மின் உற்பத்தி நிலைய செயற்றிட்டம் | 17.1 |
| **சீனா அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம்** | **152.8** |
| இதில்; முன்னுரிமை வீதிகளின் மீளமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்றிட்டம் | 152.8 |
| **சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | **692.2** |
| இதில்; புத்தளம் நிலக்கரி செயற்றிட்டம் - பாகம் II | 451.5 |
| அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் | 115.0 |
| இலங்கை புகையிரதத்திற்காக 13 டீசல் பல்புடை அலகுகள் விநியோகிக்கும் செயற்றிட்டம் | 30.3 |
| நீர்க்கலங்களுக்கான எண்ணெய் வழங்கும் செயற்றிட்டம், அம்பாந்தோட்டையிலுள்ள தடாகப் பண்ணைச் செயற்றிட்டம் | 26.8 |
| கொழும்பு-கட்டுநாயக்க விரைவுப் பாதை பிரிவு எ1 | 19.4 |
| கொழும்பு-கட்டுநாயக்க விரைவுப் பாதை பிரிவு எ4 | 18.5 |
| கொழும்பு-கட்டுநாயக்க விரைவுப் பாதை பிரிவு எ2 | 17.6 |
| **பிரான்சிய அரசாங்கம்** | **50.2** |
| இதில்; திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட உட்கட்டுமான செயற்றிட்டம் | 35.4 |
| **யப்பானிய அரசாங்கம்** | **302.9** |
| இதில்; மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டம் | 58.4 |
| கொழும்பு பெரும்பாகத்திற்கான போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் | 52.0 |
| நீர்த்துறை அபிவிருத்தி செயற்றிட்டம் | 45.8 |
| தென்மாகாண பெருந்தெரு கட்டுமான செயற்றிட்டம் (II) | 30.4 |
| கொழும்பு நகரம் மின்சார வழங்கல் அபிவிருத்திச் செயற்றிட்டம் | 24.8 |
| வறியோர் பொருளாதார உயர்வு, சமூக மேம்படுத்தல் செயற்றிட்டம் | 18.4 |
| வறியோருக்கு சார்பான கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் | 14.0 |
| **கொரிய குடியரசின் அரசாங்கம்** | **36.7** |
| இதில் றுகுனுபுர நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்றிட்டம் | 15.4 |
| **மக்கள் சீன குடியரசின் அரசாங்கம்** | **103.7** |
| இதில் புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டம் - கொள்வனவாளர் கடன் வசதி | 103.7 |
| **எச்.எஸ்.பிசி வங்கி பிஎல்சி (ஐக்கிய இராச்சியம்)** | **77.4** |
| இதில்; கொள்கலன் கையாளல் கருவிகளுக்கான அவசர கொள்வனவுகள் - ஜயா முனைக்கோடி | 35.0 |
| டிக்கோவிட்ட மீன்பிடி துறைமுக அபிவிருத்தி | 23.0 |
| பிராந்திய பாலங்கள் செயற்றிட்டம் | 16.9 |
| **பன்நாட்டு அபிவிருத்திச் சம்மேளனம்** | **144.5** |
| இதில்; வட பிராந்திய அவசர மீள் நிலைப்படுத்தல் செயற்றிட்டம் | 23.4 |
| வடக்கு - கிழக்கு மீள்கட்டுமான வீடமைப்பிற்கான மேலதிக நிதியிட்டல் செயற்றிட்டம் | 17.4 |
| மாகாண வீதிகள் செயற்றிட்டம் | 15.3 |
| இரண்டாவது சமூக அபிவிருத்தி மற்றும் ஜீவனோபய முன்னேற்ற செயற்றிட்டம் | 15.2 |
| **டென்மார்க் நோர்டியா வங்கி ஏ/எஸ்** | **30.8** |
| இதில்; ஒலுவில் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம் | 19.0 |

மூலம்: வெளிநாட்டு மூலவளத் திணைக்களம்

**உட்பாய்ச்சல்கள் காணப்பட்டபோதும் 2010இல் தேறிய சொத்துப்பட்டியல் முதலீடு 2009இன் ஐ.அ.டொலர் 6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 230 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்தது.** இது, பெரும்பாலும் பங்குச் சந்தையில் அதிகரித்துச் செல்லும் விலைகளிலிருந்து இலாபத்தை அடைவதற்காக பங்குகளின் பெருமளவு வெளிநாட்டவர்களால் விற்கப்பட்டமையாலும் பன்னாட்டு முதலீட்டு நிதியம் ஒன்று ஒரு தடவை மாத்திரம் மேற்கொண்ட விற்பனையாலும் ஏற்பட்டது.

**வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 2009இன் ஐ.அ.டொலர் 435 மில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 249 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன.** இதேவேளை, வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2009இன் ஐ.அ.டொலர் 98மில்லியன் கொண்ட வீழ்ச்சியிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 815 மில்லியனுக்கு அதிகரித்தன. இதன்படி, வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பு வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுப் பொறுப்புக்களை 2010இல் ஐ.அ.டொலர் 1,154 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 1,064 மில்லியனால் அதிகரிக்கச் செய்தது. வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பெரும்பாலும் ஐ.அ.டொலர் 450 மில்லியனை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உள்நாட்டு, வெளிநாட்டு நாணயத்தைக் கடன் வழங்கல் மற்றும் ஏனைய தனியார்துறை தொழில் முயற்சிகளை நிதியிடுவதற்கும் அது போல் இலங்கை அபிவிருத்தி முறிகளிலான முதலீடுகளை நிதியிடுவதற்கும் வெளிநாட்டுச் செலாவணியை உருவாக்குவதற்கு வெளிநாட்டுச் சொத்துக்களை மாற்றியமைத்து வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரித்தமையாலும் ஏற்பட்டது.

## சென்மதி நிலுவை

**2010 இல் சென்மதி நிலுவையில் காணப்பட்ட திரண்ட நிலுவை 2009 இல் ஐ.அ. டொலர் 2,725 மில்லியன் கொண்ட முன்னெப்போதும் பதிவு செய்யப்படாத மிகையைத் தொடர்ந்து ஐ.அ. டொலர் 921 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்தது.** மூலதன மற்றும் நிதியியல் கணக்குக்கான உயர் உட்பாய்ச்சல்கள் விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் சென்மதி நிலுவையில் மிகையை பதிவுசெய்ய வழிவகுத்தது. 2010 ஒத்தோபரில் ஐ.அ. டொலர் 1 பில்லியன் கொண்ட மூன்றாவது நாட்டுக்கான பன்னாட்டு முறி வழங்கலிலிருந்து அரசுக்கான நிதியியல் உட்பாய்ச்சல்கள், நீண்டகால தனியார் முதலீடுகளிலான அதிகரிப்பு என்பன சென்மதி நிலுவையிலான மிகைக்குப் பங்களிப்பு செய்தன. உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி, முன்னேற்றமடைந்த நிதியியல் சந்தை நிலைமைகள் மற்றும் உறுதியான பேரண்டப் பொருளாதாரச் சூழலால் ஏற்படுத்தப்பட்ட அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கை, மூலதன மற்றும் நிதியியல் கணக்குக்கு உயர் உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்கு உதவின. நடுத்தரத்திலிருந்து நீண்ட காலத்துக்கு சென்மதி நிலுவையைப் பலப்படுத்துவதற்கு படுகடனை உருவாக்காத மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்ற நீண்டகால நிதியியல் பாய்ச்சல்களை பலப்படுத்த வேண்டும். இதை அடைவதில், கட்டுப்பாடற்ற நிதியியல் திறந்த நிலையை ஊக்குவிப்பதற்கும் முதலீட்டு சூழலை அதிகரிப்பதற்கும் முன்னேற்பாடான வழிமுறைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. இவை முதலீட்டுச்சபையால் மேற்கொள்ளப்படும் முதலீட்டு ஊக்குவிப்பு உபாயம் மற்றும் வெளிநாட்டுச் செலாவாணிக் கொடுக்கல் வாங்கல்களைத் தளர்த்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

## வெளிநாட்டு ஒதுக்குகள்

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஆ.தீ.ஒ பெறுகைகள் நீங்கலாக) 2009 இறுதியிலான ஐ.அ.டொலர் 5,097 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் ஐ.அ.டொலர் 6,610 மில்லியன் கொண்ட உயர் மட்டத்தைப் பதிவு செய்யும் வகையில் அதிகரித்தன.** வெளிநாட்டால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் பகிர்ந்தளிப்புக்கள், ப.நா. நிதியம் - துணைநில் ஒழுங்கு வசதியின் கீழான மூன்று தொகுதிகளின் பெறுகைகள், மூன்றாவது நாட்டுக்கான பன்னாட்டு முறியின் பெறுகைகள் மற்றும் தனியார் துறைக்கான உட்பாய்ச்சல்கள் 2010 இல் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதில் பெரிதும் பங்களிப்புச் செய்தன. ஒத்தோபர் 4, 2010 அன்று அலுவல்சார் ஒதுக்குகள் 6.7 மாதங்கள் இறக்குமதிக்குச் சமனான ஐ.அ.டொலர் 7,173 மில்லியன் கொண்ட உயர் மட்டத்தைப் பதிவு செய்தன. எனினும், உயர் மட்டத்திலான பெற்றோலியச் செலவுகளை தீர்ப்பனவு செய்வதற்காக போதுமான வெளிநாட்டுச் செலாவணியை உறுதிப்படுத்துவதற்கும் செலாவணி வீதத்தில் தேவையற்ற தளம்பலைத் தவிர்ப்பதற்குமாக மத்திய வங்கி உள்நாட்டுச் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியமையால் 2010 இன் இறுதிக் காலாண்டில் அலுவல்சார் ஒதுக்குகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. இதன்படி, 2010 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஆ.தீ.ஒ பெறுகைகள் நீங்கலாக) 5.9 மாத இறக்குமதிக்குச் சமனான ஐ.அ.டொலர் 6,610 மில்லியனாக விளங்கின. இதேவேளை, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பெறுகைகள் நீங்கலாக மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2009 இன் ஐ.அ.டொலர் 6,770 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இல் ஐ.அ.டொலர் 8,035 மில்லியனுக்கு (7.1 மாத இறக்குமதிகளுக்குச் சமனானது) அதிகரித்தது.

**பன்னாட்டு நாணய நிதிய - துணைநில் ஒழுங்கு வசதியின் கீழ், மொத்தமாக சி.எ.உ 1.65 பில்லியனை (கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்) 2009 யூலையில் ஒப்புதலளிக்கப்பட்டது.** ஐ.அ.டொலர்கள் 652 மில்லியன் பெறுமதியான முதல் இரு தொகுதிகள் 2009 யூலை மற்றும்

அட்டவணை 5.10

**இலங்கையின் வெளிநாட்டு சொத்துக்கள் (அ)**

| உடைமை | ஐ.அ.டொலர் மில்லியன் (ஆ) | | | | | ரூபா.மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 | 2009 (இ) | 2010 (இ) (ஈ) | 2006 | 2007 | 2008 | 2009 (இ) | 2010 (இ) (ஈ) |
| 1. அரசு | 128 | 99 | 101 | 113 | 88 | 13,789 | 10,768 | 11,411 | 12,920 | 9,747 |
| 2. மத்திய வங்கி | 2,709 | 3,409 | 2,301 | 5,244 | 7,109 | 291,747 | 370,640 | 260,297 | 599,880 | 788,722 |
| 3. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் (1+2) | 2,837 | 3,508 | 2,402 | 5,357 | 7,196 | 305,536 | 381,408 | 271,708 | 612,799 | 798,469 |
| 4. வர்த்தக வங்கிகள் | 1,169 | 1,448 | 1,238 | 1,673 | 1,424 | 125,867 | 157,454 | 140,075 | 191,373 | 158,031 |
| 5. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் (3+4) | 4,005 | 4,956 | 3,640 | 7,030 | 8,621 | 431,403 | 538,862 | 411,783 | 804,173 | 956,500 |
| 6. திரண்ட அலுவல்சார் சொத்துக்கள் மாதங்களில் | | | | | | | | | | |
| 6.1 பொருட்களின் இறக்குமதிகள் | 3.3 | 3.7 | 2.0 | 6.3 | 6.4 | | | | | |
| 6.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 2.9 | 3.3 | 1.8 | 5.5 | 5.7 | | | | | |
| 7. மொத்த சொத்துக்கள் மாதங்களில் | | | | | | | | | | |
| 7.1 பொருட்களின் இறக்குமதிகள் | 4.7 | 5.3 | 3.1 | 8.3 | 7.7 | | | | | |
| 7.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 4.1 | 4.7 | 2.8 | 7.2 | 6.8 | | | | | |

(அ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் உட்பட சந்தை விலையில் கணிக்கப்பட்டுள்ளன.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவப்படுத்தல் வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ளன ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூபா (ஆண்டிறுதி) | 107.71 | 108.72 | 113.14 | 114.38 | 110.95 |

(இ) 2009 திசெம்பர் மற்றும் 2010 முடிவில், வெளிநாட்டுச் செலாவணி உடன்படிக்கைகளில் செலுத்த வேண்டிய மீதியான முறையே ஐ.அ. டொலர். 245 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 97 மில்லியன் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) தற்காலிகமானவை


நவெம்பரில் பெறப்பட்டன. 2010 யூனில் துணைநில் ஒழுங்கு வசதியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது மீளாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந் நிகழ்ச்சித் திட்டத்தின் காலப்பகுதி மேலுமொரு ஆண்டால் நீடிக்கப்பட்டதுடன் எதிர்கால பகிர்ந்தளிப்புக்கள் ஏழு சமமான தொகுதிகளில் மீள கட்டம் கட்டமாக வழங்கப்படும். எனவே 2010 இல், ஐ.அ.டொலர் 620 மில்லியன் கொண்ட மூன்று தொகுதிகள் பெறப்பட்டன. இதேவேளை, ஐ.அ.டொலர் 217 மில்லியன் கொண்ட ஆறாவது தொகுதி 2011 பெப்புருவரியில் பெறப்பட்டது.

**இலங்கை முன்பு பட்டியலிடப்பட்ட வகையான வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கை தகுதி பெறும் நாடுகளிலிருந்து 2010 சனவரியில் பன்னாட்டு நாணய நிதியத்தால் நடுத்தர வருமானம் பெறும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரம் என்ற அந்தஸ்துக்கு தகுதி பெற்றமை நாட்டை பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் உறுதியாக எறிவு செய்வதற்கு இயலச் செய்தது(சிறப்புக்குறிப்பு1).** 10 ஆண்டு காலத்தைக் கொண்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட மூன்றாவது நாட்டுக்கான முறி 6 தடவைகளுக்கும் கூடுதலாக உதவப்பட்டு இலங்கைப் பொருளாதாரத்தில் பலமான முதலீட்டாளர் நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. இம் முறியின் வழங்கலின் நறுக்கு வீதம் முன்னைய, நாட்டிற்கான முறி வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவான 6.25 சதவீதமாக விளங்கியது (அதாவது 2009 இல் 7.4 சதவீதம் மற்றும் 2007 இல் 8.25 சதவீதம், ஒவ்வொன்றும் 5 ஆண்டு காலத்துடனான ஐ.அ.டொலர் 500 மில்லியன்). உலக வங்கியின் சலுகை அடிப்படையிலான துணை நிறுவனமான பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிடமிருந்து இலங்கை தொடர்ந்து நிதியிடலைப் பெறும் வேளையில் இலங்கை நடுத்தர வருமான அந்தஸ்துக்கு தகுதி பெற்றமை மற்றும் உலக வங்கியின் ஆகப்பிந்திய கொடுகடன் நம்பகத்தன்மை மதிப்பீடு என்பன மீள் நிருமாணம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கியின் சலுகை அடிப்படையில் இல்லாத பொறிமுறையிலிருந்தும் நிதியிடலைப் பெறுவதற்கு இலங்கையின் தகைமையை உறுதிப்படுத்தியது. இலங்கைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பெருமளவிலான திரண்ட மூலவளங்கள் உயர் வளர்ச்சி உத்வேகத்தை நீடித்து நிலைத்து வைத்திருப்பதற்குத் தேவையான மட்டத்துக்கு முதலீட்டை உயர்த்த உதவும்.

**பன்னாட்டுத் தரமிடல் முகவர்கள் 2010 இல் நாடு தொடர்பான அவர்களது தரமிடல்களை உயர்த்தினர்.** ஸ்ரான்டட் அன்ட் புவர்ஸ் நீண்ட கால வெளிநாட்டு நாணய தரமிடலை 'பீ' இலிருந்து 'பீ+' இற்கு உயர்த்தியதுடன் உள்நாட்டு நாணய தரமிடலை பீ+ இலிருந்து 'பீபீ-' இற்கு தரமுயத்தியது. பிட்ச் தரமிடல் முகவர் நீண்ட கால வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நாணய வழங்குனர்களின் செலுத்தத் தவறிய வீதத்தை 'பீ+' இல் உறுதிப்படுத்தியதுடன் தோற்றப்பாட்டை 'உறுதியிலிருந்து' 'சாதகமானது' என திருத்தியமைத்த வேளையில் முதல்

வரைபடம் 5.11

**காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்**



**சிறப்புக்குறிப்பு 11**

## பன்னாட்டு நாணய நிதிய - துணைநில் ஒழுங்குமுறை வசதியின் முன்னேற்றம்

பன்னாட்டு நாணய நிதியம் சென்மதி நிலுவை உதவியாக இலங்கைக்கு சிஎஉ 1.65 பில்லியன் (கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்) கொண்ட 20 மாத துணைநில் ஒழுங்குமுறை வசதிக்கு 2009 யூலை 24ஆம் நாளன்று ஒப்புதலளித்தது. இது நிதியத்துடனான நாட்டில் தற்போதைய அனுமதிப்பங்கின் 400 சதவீதத்திற்கு வகைகூறுவதுடன் இலங்கைக்கு பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட முன்னெப்போதுமில்லாத மிகக் கூடிய வசதியாகும். இவ் வசதி ஆரம்பத்தில் ஒவ்வொன்றும் சிஎஉ 206.7 மில்லியன் கொண்ட 8 சமமான தவணைப் பணங்களில் பகிர்ந்தளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது (சிறப்புக்குறிப்பு 9: துணைநில் ஒழுங்குமுறைகள் வசதி, ஆண்டறிக்கை 2009).

துணைநில் ஒழுங்குமுறை வசதி அதன் கட்டமைப்பினுள் வெற்றிகரமாக முன்னேறியுள்ளது. இது வரை, பன்னாட்டு நாணய நிதியம் ஆறு காலாண்டு மீளாய்வுகளை நடத்தியதுடன் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட துணைநில் ஒழுங்குமுறை வசதியின் கீழ் ஆறு தொகுதிகளை விடுவித்தது.

பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான அலுவலர் குழுவொன்று துணைநில் ஒழுங்குமுறை வசதியின் ஆறாவது மீளாய்வுக்காக 2011 பெப்புருவரியில் கொழும்பிற்கு விஜயம் செய்தது. அதற்கமைய, ஏப்ரல் 2011இல் ஏழாவது தொகுதி எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாவது மீளாய்வு 2011 மே மாதத்தில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை சி.கு.11.1**

### மீளாய்வுகளின் அட்டவணையும் துணைநில் ஒழுங்குவசதியின் பகிர்ந்தளிப்புக்களும்

| சபை கூட்டத்தின் திகதி | மீளாய்வு இல. | தொகுதி இல. | தொகை | |
|---|---|---|---|---|
| | | | சிஎஉ மில். | ஐ.அ. டொலர் மில். |
| 2009 யூலை 24 | - | முதலாவது | 206.7 | 322.0 |
| 2009 நவெம்பர் 06 | முதலாவது | இரண்டாவது | 206.7 | 329.0 |
| 2010 யூன் 28(அ) | இரண்டாவதும் மூன்றாவது | மூன்றாவதும் நாலாவதும் | 275.6 | 407.8 |
| 2010 செத்தெம்பர் 24 | நாலாவது | ஐந்தாவது | 137.8 | 212.5 |
| 2011 பெப்புருவரி 03 | ஐந்தாவது | ஆறாவது | 137.8 | 216.6 |
| மொத்தம் | | | 964.6 | 1,487.9 |

(அ) இந்நிகழ்ச்சித்திட்டம் ஒரு ஆண்டால் நீடிக்கப்பட்டதுடன் எதிர்காலப் பகிர்ந்தளிப்புக்கள் ஒவ்வொன்றும் சிஎஉ 137.8 மில்லியன் கொண்ட ஏழு சமமான பகிர்ந்தளிப்புக்களுக்கு மீள்கட்டமிடப்பட்டன.

முறையாக இலங்கையை உள்ளடக்கிய மூடியின் முதலீட்டாளர் பணிகள் உறுதியான தோற்றப்பாட்டுடன் 'பீ1' என்ற நாட்டுக்கான தரமிடலை குறித்து ஒதுக்கியது.

**குறுகிய கால பொறுப்புக்களுக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் விகிதத்தால் அளவிடப்படும் ஒதுக்குப் போதுமாந்தன்மை 2009 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 81 சதவீதத்திலிருந்து 2010 இறுதியில் 95.2 இற்கு அதிகரித்தது.** இது குறுங்கால படுகடனின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் நாட்டுக்கான நிதியியல் உட்பாய்ச்சல்களால் உதவப்பட்ட அதிகரித்த ஒதுக்கு மட்டங்களால் ஏற்பட்டது. மேற்கொள்ளப்பட்ட அரச பிணையங்கள் சந்தைக்கு ஏற்பட்ட வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை அலுவல்சார் ஒதுக்குகளுக்கு மத்திய வங்கி ஈர்த்துக் கொண்டமை ஒதுக்கு போதுமாந்தன்மை விகிதத்தை மேம்படுத்துவதற்கு வசதியளித்தது.

**முன்னேற்றமடைந்து வரும் முதலீட்டாளர் நம்பிக்கையின் எதிர்பார்ப்பு மற்றும் உறுதியடைந்த வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை என்பவற்றுடன் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் மீதான குறிப்பிட்ட கட்டுப்பாடுகளை படிப்படியாகத் தளர்த்தத் தீர்மானித்தது.** இதன்படி, குறிப்பிட்ட சிறப்புக் காரணங்களுக்காக வெளிநாடுகளில் வங்கிக் கணக்கைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குவதற்கு வெளிநாட்டு நாணயத்தில் முன்னோக்கிய ஒப்பந்தங்களில் நுழைவதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகள் மீதான முற்பணக் கொடுப்பனவுகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் நீக்கப்பட்டன. இறக்குமதிச் செலவுகளின் முற்கொடுப்பனவின் இடைநிறுத்தம் நீக்கப்பட்டதுடன் 2010 மாச்சு 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தக வங்கிகளில் வதிவற்றோரினால் பேணப்படும் வெவ்வேறான முதலீட்டாளர் கணக்குகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இதேவேளை, 2010 நவெம்பர் 22இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பல தளர்த்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவை பெரும்பாலும் உள்ளூர் கம்பனிகளினால் வழங்கப்பட்ட ரூபாவால் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக்கடனில் முதலிடுவதற்கு


வெளிநாட்டவர்களுக்கான அனுமதி, இலங்கையில் வியாபாரத் தலங்களைத் திறப்பதற்கு வெளிநாட்டுக் கம்பனிகளுக்கான அனுமதி, வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதற்கு கம்பனிகளுக்கான ஒப்புதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. முன்னோக்கிச் செல்லும் வகையில், வெளிநாட்டுக் கம்பனிகளின் பங்கில் முதலிடுவதற்கு இலங்கையில் வதியும் தனிப்பட்ட நபர்கள், கம்பனி மற்றும் கூட்டிணைக்கப்படாத நிறுவனங்களுக்கான அனுமதி போன்ற மேலதிகத் தளர்த்தல்கள் 2011 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டன.

## 5.6 வெளிநாட்டுப் படுகடனும் படுகடன் பணிகளும்

### வெளிநாட்டுப் படுகடன்

**நடுத்தர மற்றும் நீண்ட கால மற்றும் குறுகிய காலப் படுகடனை உள்ளடக்கிய நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2009 இன் 44.4 சதவீதத்திலிருந்து 2010 இல் மொ.உ.உற்பத்தியின் 43.3 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.** எனினும், ஐ.அ.டொலர் நியதிகளில் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2009 இன் ஐ.அ.டொலர் 18.7 பில்லியனிலிருந்து 2010 இல் ஐ.அ.டொலர் 21.4 பில்லியனுக்கு 14.9 சதவீதத்தால் அதிகரித்தது. நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடனிலான அதிகரிப்பு அண்ணளவாக ஐ.அ.டொலர் 3.3 பில்லியனாகக் காணப்பட்டவேளையில் வெளிநின்ற மொத்தப்படுகடனிலான அதிகரிப்பு குறுகிய காலப் படுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக மிதமடைந்தது. குறுகிய காலப் படுகடனில் ஏற்பட்ட குறைவடைவு முக்கியமாக இவ்வாண்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகக் கொடுகடன்களின் தீர்ப்பனவு காரணமாக ஏற்பட்டது. இதேவேளை, ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டுக்கான முறி மற்றும் ப.நா.நி-து.நி.ஒ வசதியின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் உள்ளிட்ட அரசுக்கான உயர்மட்ட உட்பாய்ச்சல்கள் மற்றும் குறிப்பாக புத்தளம் நிலக்கரி வலு செயற்றிட்டத்தின் பேரிலான தனியார் துறைக்கான உட்பாய்ச்சல்கள் காரணமாக நடுத்தர நீண்ட காலப் படுகடன் அதிகரித்தது. வெளிநின்ற மொத்தப்படுகடனின் நாணயக்கூட்டில் சிஎஉ மற்றும் ஐ.அ.டொலரின் பங்குகள் முறையே 31.4 சதவீதமாகவும் 29.8 சதவீதமாகவும் விளங்குகையில் ஜப்பானிய யென் 27.9 சதவீத ஆதிக்கத்தைக் கொண்டிருந்தது. வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 51 சதவீதமளவால் கணிசமானளவில் அதிகரித்து 2010 இறுதியில் ஐ.அ.டொலர் 3.4 பில்லியனாக விளங்கின. இது பெரும்பாலும் குறிப்பாக இலங்கைப் பெற்றொலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட

வரைபடம் 5.12 வெளிநாட்டுப் படுகடன்




கம்பனிக் கடன்பாட்டாளர்களுக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட இறக்குமதிக் கொடுகடன்கள் காரணமாக வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்கள் 2009 இறுதியிலான ஐ.அ.டொலர் 1.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் ஐ.அ.டொலர் 2.6 பில்லியனுக்கு அதிகரித்தமையால் ஏற்பட்டது. இதேவேளை, ஆண்டினிறுதியிலான பிற்போடப்பட்ட தீர்ப்பனவு காரணமாக ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்கள் 2009 இறுதியின் ஐ.அ.டொலர் 261 மில்லியனிலிருந்து 2010 இறுதியில் ஐ.அ.டொலர் 586 மில்லியனுக்கு அதிகரித்தன. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் மற்றும் பொறுப்புக்கள் 2009 இன் 49.7 சதவீதத்திலிருந்து 2010 இன் இறுதியில் 50.1 சதவீதத்துக்குச் சிறிதளவால் அதிகரித்தது.

**வெளிநாட்டுப் படுகடனின் முக்கிய பங்குக்கு அரசாங்கம் வகை கூறியது.** நடுத்தரத்திலிருந்து நீண்டகாலம் வரையான படுகடனில் அரச படுகடன் 85.4 சதவீதத்துக்கு வழிகூறுகையில் எஞ்சியவை தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகளையும் பன்னாட்டு நாணய நிதியத்துக்கான படுகடன் கடப்பாடுகளையும் பிரதிபலித்தன. வெளிநின்ற மொத்த அரச வெளிநாட்டுப் படுகடனில் சலுகை ரீதியிலான படுகடன் 2009 இறுதியின் 81 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் 71 சதவீதத்துக்கு வகை கூறியது. பல்புடை நிறுவனங்களிலிருந்து சலுகை ரீதியிலான கடன்களைப் பெறுவதற்கான வசதி இலங்கை நடுத்தர வருமானம் உடைய நாடாக வந்ததன் மூலம் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், உலக வங்கியின் சலுகை ரீதியில் கடன் வழங்கும் நிறுவனமாக பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிலிருந்து இலங்கை தொடர்ந்தும் நிதியத்தைப் பெறும். மேலும் மொத்தப் படுகடனுக்கு குறுகிய காலப் படுகடனின் விகிதம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்

அட்டவணை 5.11

**வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடனும் வங்கிதொழிற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா. மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (அ) | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (அ) |
| 1. நடுத்தர, நீண்ட காலப்படுகடன் | 11,347 | 12,879 | 13,646 | 15,564 | 18,823 | 1,222,175 | 1,400,883 | 1,543,952 | 1,780,313 | 2,088,449 |
| 1.1 அரசு | 10,245 | 11,744 | 12,593 | 13,769 | 16,076 | 1,103,418 | 1,276,846 | 1,424,729 | 1,574,933 | 1,783,729 |
| 1.2 அரச கூட்டுதாபனங்களும் | | | | | | | | | | |
| அரச உத்தரவாதத்துடனான தனியார்துறையும் | 465 | 345 | 251 | 110 | 517 | 50,065 | 37,501 | 28,429 | 12,608 | 57,398 |
| 1.3 அரச கூட்டுதாபனங்களும் | | | | | | | | | | |
| அரச உத்தரவாதமற்ற தனியார்துறையும் | 393 | 539 | 634 | 967 | 919 | 42,376 | 58,553 | 71,715 | 110,570 | 101,913 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள்(ஆ) | 244 | 251 | 169 | 719 | 1,311 | 26,316 | 27,933 | 19,079 | 82,201 | 145,410 |
| 2. குறுங்கால படுகடன் | 634 | 1,111 | 1,460 | 3,098 | 2,615 | 68,286 | 120,748 | 165,207 | 354,341 | 290,150 |
| 2.1 அரசு (இ) | - | 457 | 212 | 1,622 | 2,171 | - | 49,641 | 24,006 | 185,534 | 240,856 |
| 2.2 ஏனையவை (ஈ) | 634 | 654 | 1,248 | 1,476 | 444 | 68,286 | 71,107 | 141,201 | 168,808 | 49,294 |
| 3. வங்கியற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 1,994 | 2,493 | 2,669 | 2,251 | 3,393 | 214,802 | 271,063 | 301,950 | 257,575 | 376,418 |
| 3.1 மத்திய வங்கி (உ) | 3 | 2 | 1 | 227 | 228 | 284 | 219 | 64 | 26,042 | 25,322 |
| 3.2 வர்த்தக வங்கிகள் (ஊ) | 1,681 | 2,046 | 1,861 | 1,763 | 2,578 | 181,040 | 222,389 | 210,531 | 201,696 | 286,052 |
| 3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 311 | 446 | 808 | 261 | 586 | 33,478 | 48,454 | 91,355 | 29,837 | 65,044 |
| 4. மொத்த வெளிநாட்டுப்படுகடன் (1+2) | 11,981 | 13,989 | 15,107 | 18,662 | 21,438 | 1,290,461 | 1,521,581 | 1,709,159 | 2,134,654 | 2,378,599 |
| 5. மொத்த வெளிநாட்டுபடுகடனும் பொறுப்புக்களும் (1+2+3) | 13,976 | 16,483 | 17,775 | 20,913 | 24,830 | 1,505,263 | 1,792,643 | 2,011,109 | 2,392,229 | 2,755,017 |
| **ஒப்பந்த குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர மற்றும் நீண்ட கால கடன்கள்** | | | | | | | | | | |
| செயற்றிட்டக்கடன்கள் | 9,087 | 10,002 | 11,148 | 11,914 | 13,174 | 978,356 | 1,087,359 | 1,261,304 | 1,362,806 | 1,461,729 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 867 | 1,064 | 740 | 708 | 1,516 | 93,331 | 115,697 | 83,703 | 81,025 | 168,151 |
| நிரம்பலாளர் கொடுகடன் | 435 | 679 | 705 | 1,146 | 1,838 | 46,877 | 73,790 | 79,722 | 131,103 | 203,889 |
| ப.நா.நி.எடுப்பனவுகள் (ஆ) | 244 | 251 | 169 | 719 | 1,311 | 26,316 | 27,933 | 19,079 | 82,201 | 145,410 |
| ஏனைய கடன்கள் (எ) | 718 | 884 | 885 | 1,077 | 985 | 77,295 | 96,054 | 100,145 | 123,178 | 109,271 |
| **குறுங்காலப்படுகடனும் வங்கித் தொழிற்துறைப் பொறுப்புக்களும்** | 2,628 | 3,604 | 4,129 | 5,349 | 6,008 | 283,088 | 391,811 | 467,157 | 611,916 | 666,567 |
| **மொ.உ.உ.இன் சதவீதமாக (ஏ)** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 42.4 | 43.2 | 37.1 | 44.4 | 43.3 | 43.9 | 42.4 | 38.8 | 44.1 | 42.5 |
| மொத்த வங்கித் தொழிற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 7.1 | 7.7 | 6.6 | 5.4 | 6.8 | 7.3 | 7.6 | 6.8 | 5.3 | 6.7 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 49.4 | 51.0 | 43.7 | 49.7 | 50.1 | 51.2 | 50.1 | 45.6 | 49.5 | 49.2 |
| குறுங்காலப்படுகடன் | 2.2 | 3.4 | 3.6 | 7.4 | 5.3 | 2.3 | 3.4 | 3.7 | 7.3 | 5.2 |
| குறுங்காலப்படுகடனும் வங்கித்தொழிற்துறையின் வெளிநாட்டு பொறுப்புக்கள் | 9.3 | 11.1 | 10.1 | 12.7 | 12.1 | 9.6 | 10.9 | 10.6 | 12.7 | 11.9 |
| **மொத்தப் படுகடனினதும் பொறுப்புக்களினதும் சதவீதமாக** | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 4.5 | 6.7 | 8.2 | 14.8 | 10.5 | 4.5 | 6.7 | 8.2 | 14.8 | 10.5 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 14.3 | 15.1 | 15.0 | 10.8 | 13.7 | 14.3 | 15.1 | 15.0 | 10.8 | 13.7 |
| **அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுகடன்** | 22.4 | 31.7 | 60.8 | 57.8 | 36.3 | 22.4 | 31.7 | 60.8 | 57.8 | 36.3 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) 2009இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் முதன்னிலை எடுப்பனவு வசதியின் கீழான எடுப்பனவுகள் உள்ளடங்கலாக
(இ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளை உள்ளடங்குகின்றது
(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈரானிய கொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.
(உ) 2009இல் ஐ.அ.டொலர் 200 மில்லியன் நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக
(ஊ) கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளை உள்ளடக்கி வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்
(எ) அரச கூட்டுதாபனங்களினதும் தனியார்துறை நிறுவனங்களினதும் நீண்டகாலக் கடன்களை உள்ளடக்கியது
(ஏ) தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைகளத்தால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளிலமைந்த மொ.உ.உ யினை அடிப்படையாகக் கொண்டது.

மூலங்கள்: வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வர்த்தகக் கொடுகடனிலான குறைவு காரணமாக 2009 இறுதியின் 16.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் 12.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவு

**கடன் தீர்ப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2009 இன் ஐ.அ.டொலர் 1,702 மில்லியனிலிருந்து 2010 இல் ஐ.அ.டொலர் 1,633 மில்லியனுக்கு பெயரளவு நியதிகளில் வீழ்ச்சியடைந்தன.** மேலும், பொருட்கள் மற்றும் பணிகளின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2009இன் 19 சதவீதத்திலிருந்து 2010இல் 15.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தன. 2009இலான உயர் படுகடன் பணிக் கொடுப்பனவு, விகிதம் ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட கூட்டுக் கடன்களின் தீர்ப்பனவு காரணமாக ஏற்பட்டிருக்கையில் 2010இல் கூட்டுக்கடன் தீர்ப்பனவுகள் ஐ.அ.டொலர் 25 மில்லியனாக மட்டுமே காணப்பட்டது. இத்துடன் 2004 சுனாமிக்குப் பின் வழங்கப்பட்ட சட்ட இசைவுத் தாமதம் காரணமாக மீள் அட்டவணையிடப்பட்ட கடன் கடப்பாட்டின் முழுமையான தீர்ப்பனவும் 2010இல் குறைந்த படுகடன் பணிக் கொடுப்பனவு விகிதத்தை ஏற்படுத்தியது.

அட்டவணை 5.12

வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (அ) | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 (அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 1,080 | 1,232 | 1,525 | 1,702 | 1,633 | 112,670 | 136,521 | 165,511 | 195,727 | 184,610 |
| 1.1 படுகடன் தீர்ப்பனவுகள் | 759 | 791 | 1,075 | 1,346 | 1,142 | 79,227 | 87,731 | 116,702 | 154,713 | 129,121 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 144 | 5 | 77 | 95 | 46 | 15,276 | 789 | 8,582 | 10,941 | 5,238 |
| (ii) ஏனையவற்றிற்கு | 615 | 786 | 998 | 1,251 | 1,096 | 63,952 | 86,942 | 108,120 | 143,772 | 123,883 |
| 1.2 வட்டிப்கொடுப்பனவுகள் | 321 | 441 | 450 | 357 | 491 | 33,443 | 48,790 | 48,809 | 41,014 | 55,490 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 14 | 14 | 11 | 6 | 7 | 1,452 | 1,509 | 1,173 | 644 | 803 |
| (ii) ஏனையவற்றிற்கு | 307 | 427 | 440 | 351 | 484 | 31,991 | 47,281 | 47,636 | 40,370 | 54,687 |
| 2. பொருட்களின் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் | 8,508 | 9,415 | 10,115 | 8,977 | 10,775 | 885,380 | 1,041,932 | 1,095,679 | 1,031,289 | 1,216,697 |
| 3. பொருட்களின் ஏற்றுமதிகள், பணிகள், வருமானம் மற்றும் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 10,980 | 12,365 | 13,001 | 12,423 | 15,215 | 1,142,515 | 1,368,959 | 1,408,637 | 1,427,658 | 1,718,370 |
| 4. படுகடன் பணி விகிதம் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 12.7 | 13.1 | 15.1 | 19.0 | 15.2 | 12.7 | 13.1 | 15.1 | 19.0 | 15.2 |
| (ii) ப.நா.நி கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 10.8 | 12.9 | 14.2 | 17.8 | 14.7 | 10.8 | 12.9 | 14.2 | 17.9 | 14.7 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 9.8 | 10.0 | 11.7 | 13.7 | 10.7 | 9.9 | 10.0 | 11.7 | 13.7 | 10.7 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 8.4 | 9.8 | 11.1 | 12.9 | 10.4 | 8.4 | 9.8 | 11.1 | 12.9 | 10.4 |
| 5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 610 | 813 | 1,066 | 1,166 | 922 | 63,368 | 89,924 | 115,508 | 134,019 | 104,240 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 56.4 | 66.0 | 69.9 | 68.5 | 56.5 | 56.2 | 65.9 | 69.8 | 68.5 | 56.5 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) ரூபா பெருமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்

(இ) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் தவிர்த்து

மூலம்: இலங்கை மத்திய வங்கி


## 5.7 செலாவணி வீத அமைப்பும் செலாவணி வீத அசைவுகளும்

**2010இல் செலாவணி வீதக் கொள்கை உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டைப் பேணுவதில் கவனம் செலுத்தியது.** 2009 மே மாதத்தில் நாட்டில் சமாதானம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட மேம்பாடடைந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் இதனால் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட பெறுமதியுயர்வு வெளிநாட்டு சூழலின் சாதகமான அபிவிருத்திகளுக்கு மத்தியில் தொடர்ந்து ஏற்பட்டது. பன்னாட்டுச் சந்தைகளில் பொருட்களது விலைகளின் மீட்சி 2010இன் இரண்டாம் அரைப்பகுதியில் ஐ.அ.டொலர் அதன் பெறுமதியை இழக்கச்செய்தது. உயர்ந்து செல்லும் வெளிநாட்டு வருவாய்கள், பணிகள் துறை உட்பாய்ச்சல்கள், உயர்ந்தளவிலான பணவனுப்பல்கள், மூன்றாவது நாட்டுக்கான பன்னாட்டு முறி வழங்கலின் பெறுகைகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலான குறுகிய கால முதலீடுகள் என்பவற்றிலிருந்தான உறுதியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களால் உதவப்பட்டு ரூபா ஐ.அ.டொலர் ஒன்றுக்கு 2010இல் ரூ.110.95 இற்கு 3.09 சதவீதத்தால் படிப்படியாக பெறுமதியில் உயர்வடைந்தது. இதேவேளை, 2010இல் ஆண்டுச் சராசரிச் செலாவணி வீதம் ஐ.அ.டொலருக்கு எதிராக 2009இன் ரூ.114.94 உடன் ஒப்பிடுகையில் ரூ.113.06 ஆக விளங்கியது. உள்நாட்டுச் சந்தையில் தொடர்ச்சியான வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களின் பின்னணியில் செலாவணி வீதத்தில் அளவுக்கதிகமான தளம்பலைத் தணிக்கவும் ரூபாவின் தேவையற்ற பெறுமதி உயர்வால் ஏற்றுமதித் துறையின் போட்டித்தன்மை பாதிக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் ஒதுக்கு நிலையை மேலும் பலப்படுத்துவற்கும் மத்திய வங்கி கிரமமாக வெளிநாட்டுச் செலாவணியை ஈர்த்தது. எனினும், 2010இன் இறுதிக் காலாண்டில் பெற்றோலியச் செலவினத்தின் தீர்ப்பனவிலிருந்து எழும் பாரிய வெளிப்பாய்ச்சல்களின் பின்னணியில் போதியளவு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி உள்நாட்டுச் சந்தைக்கு வெளிநாட்டு செலாவணியை வழங்கியது. இதன்படி, 2010இல் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 753 மில்லியனைக் கொள்வனவு செய்த வேளையில் ஐ.அ.டொலர் 820 மில்லியனை வழங்கி ஐ.அ.டொலர் 67 மில்லியன் கொண்ட தேறிய வழங்கலுக்கு வழியமைத்தது.


**2010இல் ரூபா சில ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக ஒப்பீட்டு ரீதியில் உயர் வீதத்தில் பெறுமதியில் உயர்வடைந்தது. இது யூரோவிற்கெதிராகவும் (10.95 சதவீதம்) ஸ்ரேலிங் பவுணுக்கெதிராகவும் (6.03 சதவீதம்) பெறுமதியில் உயர்வடைந்திருந்தது.** எனினும் ரூபாவானது, யப்பானிய யென்னுக்கெதிராகவும் (8.80 சதவீதம்) இந்திய ரூபாவுக்கெதிராகவும் (0.73 சதவீதம்) பெறுமதியில்

**வரைபடம் 5.13** **செலாவணி வீத அசைவுகள்**

செலாவணி வீத அசைவுகள் - ஐ.அ. டொலரொன்றிற்கு ரூபா




பயன்தரு செலாவணி வீதச் சுட்டெண்கள்
24 - நாணயங்கள் (2010 = 100)




தேய்வடைந்தது. அதேவேளை, ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு தொடர்பான அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் காரணமாக பல வெளிநாட்டு நாணயங்கள் பெறுமதியில் தேய்வடைந்தன. இதன்படி, பன்னாட்டுச் சந்தைகளில் ஐ.அ.டொலருக்கெதிராக பிரதான நாணயங்களின் அசைவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 2010இல் ரூபா சிஎஉ இற்கெதிராக 4.58 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்தது.

## பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2010இல் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் 2009 இல் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை நேர்மாறாக்கி பெறுமதியில் உயர்வடையத் தொடங்கின.** நாணய கூடைகளில் அநேகமான முக்கிய நாணயங்களுக்கெதிரான இலங்கை ரூபாவின் பெயரளவிலான பெறுமதி உயர்வடைவதைப் பிரதிபலித்து 5 - நாணயக் கூடையின் (இது ஐ.அ. டொலர், ஸ்ரேலிங் பவுண், யூரோ, ஜப்பானிய யென் மற்றும் இந்திய ரூபாவை உள்ளடக்குகிறது) அடிப்படையில் இலங்கை ரூபாவின் பெயரளவுத்தாக்கச் செலாவணி வீதம் 4.1 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்திருக்கையில் 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களின் பெயரளவு செலாவணி வீதங்கள் அடிப்படையிலான பெயரளவுத்தாக்க செலாவணி வீதம் 2.4 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்தது. வர்த்தகப்

**அட்டவணை 5.13** **செலாவணிவீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2008 | 2009 | 2010 | 2008 | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 |
| யூரோ | 159.45 | 163.72 | 147.56 | 159.32 | 160.21 | 150.10 | -2.60 | 10.95 | -0.56 | 6.73 |
| இந்திய ரூபா | 2.36 | 2.46 | 2.48 | 2.52 | 2.39 | 2.49 | -4.13 | -0.73 | 5.52 | -3.91 |
| யப்பானிய யென் | 1.25 | 1.24 | 1.36 | 1.05 | 1.23 | 1.29 | 0.89 | -8.80 | -14.60 | -4.55 |
| ஸ்டோ்லிங் பவுண் | 163.28 | 181.75 | 171.41 | 200.73 | 179.87 | 174.81 | -10.16 | 6.03 | 11.60 | 2.90 |
| ஐ.அ.டொலா் | 113.14 | 114.38 | 110.95 | 108.33 | 114.94 | 113.06 | -1.09 | 3.09 | -5.75 | 1.66 |
| சி.எ.உ | 174.27 | 178.67 | 170.84 | 171.24 | 177.22 | 172.50 | -2.46 | 4.58 | -3.37 | 2.73 |

| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் (ஆ) (இ) (2010=100) | மாதாந்தச் சுட்டென் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | மாதாந்த சுட்டெண் | | ஆண்டுச் சராசரி | |
| | திசெ. 2008 | திசெ. 2009 | திசெ. 2010 | 2008 | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 |
| பெ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 101.85 | 98.12 | 100.49 | 100.06 | 99.85 | 100.00 | -3.67 | 2.42 | -0.21 | 0.16 |
| உ.தா.செ.வீ-24 நாணயங்கள் (ஈ) | 99.35 | 97.57 | 102.82 | 95.64 | 97.75 | 100.00 | -1.79 | 5.38 | 2.20 | 2.32 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஆ) பெ.தா.செ வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்கம் வேருபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உ.தா.செ.வீதம் கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(இ) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியல் நேரடியாக பிரதிபலித்தது.

(ஈ) உ.தா.செ.வீ கணிப்பிற்கான கொநுவிசு பயன்படுத்தப்பட்டுள்ளது.

சிறப்புக்குறிப்பு 12

## தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களின் திருத்தம்

### தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள்

செலாவணி வீதம் மற்றையதன் நியதிகளில் தொடர்பான நாணயத்தின் பெறுமதியை அளவிடுகிறது. தாக்கமுள்ள செலாவணி வீதம் ஏனைய நாணயங்களின் தொகுதிக்கு எதிராக நாணயத்தின் பெறுமதியை மதிப்பிடுவதுடன் பொதுவாக சுட்டெண்[1] என குறிப்பிடப்படுகிறது. வழமையாக வெளிநாட்டு நாணயங்களின் தொகுதி தொடர்பான நாட்டின் பிரதான வர்த்தகப் பங்காளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இலங்கை மத்திய வங்கி பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (பெதாசெவீ) மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உதாசெவீ) ஆகிய இரண்டு தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களைத் தயாரிக்கிறது. பெதாசெ வீதம் என்பது இலங்கையின் மொத்த வெளிநாட்டு வர்த்தகத்துக்கு இருபுடை வர்த்தகத்தின் விகிதாசார அடிப்படையிலான நிறைகளுடன் பிரதான இருபுடை பெயரளவு செலாவணி வீதங்களின் நிறையேற்றப்பட்ட கேத்திர கணிதச் சராசரியாகும். உதாசெ வீதம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களிடையே பணவீக்க வேறுபாடுகளுக்காக உதாசெ வீதத்தை சீராக்கம் செய்வதன் மூலம் பெறப்படுவதுடன் நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையின் குறிகாட்டியாக பயன்படுத்தப்படுகிறது.

### பெதாசெவீ

பெதாசெவீதம் என்பது வெளிநாட்டு நாணயங்களின் கூடை நியதிகளில் உள்நாட்டு நாணயத்தின் இருபுடை பெயரளவு செலாவணி வீதங்களின் நிறையேற்றப்பட்ட கேத்திரகணிதச் சராசரியாகும்.

$$\text{பெதாசெவீ} = \prod_{i=1}^{n} (e / e_i)^{w_i}$$

இங்கு e: ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் (சுட்டெண்படுத்தப்பட்ட வடிவில் ரூபா ஒன்றுக்கான ஐ.அ.டொலர்கள்)

$e_i$: ஐ.அ.டொலருக்கெதிராக நாணயம் i இன் செலாவணி வீதங்கள் (சுட்டெண்படுத்தப்பட்ட வடிவில் i ஒன்றுக்கான ஐ.அ.டொலர்கள்)

$w_i$: சுட்டெண்ணில் i ஆவது நாடு/ நாணயம் இற்கு இணைக்கப்பட்ட நிறைகள்

### உதாசெவீ

உதாசெவீதம் என்பது பணவீக்கத்துக்குச் சீராக்கப்பட்ட பெதாசெவீதம் ஆகும்.

$$\text{உதாசெவீ} = \prod_{i=1}^{n} [ (e / ei ) (P / Pi ) ]^{wi}$$

P: அடிப்படைக் காலப்பகுதியில் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நுகர்வோர் விலைச் சுட்டெண் (நுவிசு)

Pi: நாடு i இன் நுவிசு

மத்திய வங்கி 1989இலிருந்து 5 நாணயக்கூடை மற்றும் 24 நாணயக் கூடை அடிப்படையில் பெதாசெவீத மற்றும் உதாசெவீதச் சுட்டெண்களைத் தயாரித்து வருகிறது. இச் சுட்டெண்களின் அண்மைய தொடர்கள் 2006[2] ஐ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. ஒரு வெளிநாட்டு நாணயத்துக்கு மட்டும் எதிரான செலாவணி வீதத்தின் அசைவுகளை அவதானிப்பதைவிட இது நாணயங்களின் கூடைக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவைப் பின் தொடர்வதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களை இயலச் செய்யும். பெதாசெவீதச் சுட்டெண் பெறுமதியிலான அதிகரிப்பு ஏனைய நாணயங்கள் தொடர்பாக ரூபாவின் பெறுமதி உயர்வைக் குறிப்பதுடன் இதற்கெதிரானதும் பொருந்தும். உதாசெ வீதச் சுட்டெண் ஏற்றுமதிப் போட்டித்தன்மை அல்லது நாணயத்தின் பிழையான வரிசைப்படுத்தலின் குறிகாட்டியாக பயன்படுத்தப்படுகிறது.

### தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களின் திருத்தம்

வர்த்தகத் தன்மைகள் காலம் காலமாக மாறுபடுகிறது. சில நாடுகளின் முக்கியத்துவம் வீழ்ச்சியடையும் அதேவேளை சில ஏனைய நாடுகளுடனான வர்த்தகப்படுத்தல் அதிகரிக்கக்கூடும். எனவே, ஒவ்வொரு 4 - 5 ஆண்டுகளுக்குப் புதிய அபிவிருத்திகளை உள்வாங்குவதற்காக தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் கிரமமாக திருத்தப்பட்டன. இதற்கிணங்க, 5 - நாணயச் சுட்டெண்கள் மற்றும் 24 - நாணயச் சுட்டெண்கள் 2010ஆம் ஆண்டுக்கு திருத்தப்பட்டன. 5 நாணய பெதாசெவீ மற்றும் உதாசெவீ சுட்டெண்கள் ஐ.அ.டொலர்,

அட்டவணை சி.கு.12.1

திருத்தப்பட்ட வர்த்தக நிறைகள்

(சதவீதம்)

| நாடு | புதிய நிறை |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 19.74 |
| இந்தியா | 15.57 |
| ஐக்கிய இராச்சியம் | 9.86 |
| சீனா | 6.41 |
| சேர்மனி | 5.88 |
| யப்பான் | 4.99 |
| இத்தாலி | 4.83 |
| பெல்ஜியம் | 4.45 |
| ஹொங்கொங் | 3.63 |
| பிரான்ஸ் | 2.93 |
| மலேசியா | 2.36 |
| ரூசியா | 2.18 |
| தாய்லாந்து | 2.15 |
| நெதர்லாந்து | 2.11 |
| கனடா | 1.96 |
| பாக்கித்தான் | 1.80 |
| சிங்கப்பூர் | 1.79 |
| இந்தோனேசியா | 1.73 |
| துருக்கி | 1.52 |
| தாய்வான் | 1.51 |
| கொரியா | 1.17 |
| அவுத்திரேலியா | 0.97 |
| வங்காளதேசம் | 0.36 |
| கென்யா | 0.10 |
| | 100.00 |

1 செலாவணி வீதங்கள், செலாவணி வீத அமைப்புக்கள் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள், தொகுக்கும் முறைமையியல் என்பனவற்றின் விரிவான விபரம் 2006இல் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட செலாவணி வீதங்கள் சிற்றேட்டுத் தொடர் இல.3: இல் கிடைக்கிறது.

2 2000 சனவரியிலிருந்து மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் பெதாசெவீ மற்றும் உதாசெவீ இன் கணிப்பின் முறைமையியல் 2003இன் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையின் சிறப்புக் குறிப்பு 16இல் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.

யூரோ, ஸ்ரேலிங் பவுண், யப்பானிய யென் மற்றும் இந்தியா ரூபா ஆகிய ஐந்து முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் அசைவை உள்வாங்குகின்றன. ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டினதும் நியதிகளில் இலங்கைக்கு வர்த்தகப்படுத்தும் நாணயங்களின் சார்பு ரீதியிலான முக்கியத்துவத்திலிருந்து பெறப்பட்ட நிறைகள் 5 நாணய பெதாசெவீ மற்றும் உதாசெவீ சுட்டெண்களைக் கணிப்பதில் இயல்பாக்கப்பட்டன. இது போலவே, 24 - நாணய பெதாசெவீ மற்றும் உதாசெவீ சுட்டெண்கள் சில புதிய வர்த்தகப் பங்காளர்களுடன் தற்போது கணிக்கப்படுவதுடன் வெளிநாட்டுத் துறையில் அண்மைய அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கிறது. இதன்படி, நாடுகளின் 2006ஆம் ஆண்டுக் கூடையிலிருந்து டென்மார்க், பிலிப்பைன்ஸ், தென்னாபிரிக்கா மற்றும் சுவீடன் என்பன அவுத்திரேலியா, பாகித்தான், ரூசியா மற்றும் துருக்கியால் பிரதியீடு செய்யப்பட்டு அந்நாடுகளுடனான வர்த்தகத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நாடுகளின் 2010ஆம் ஆண்டின் கூடை உருவாக்கப்படுகிறது. கணிப்பீட்டு முறைமையியல் தொடர்ந்து மாற்றமின்றிக் காணப்பட்டது.


உதாசெவீதச் சுட்டெண்ணைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் விலைச் சுட்டெண் தொடர்பான நாடுகளின் உற்பத்தியாளர் விலைகளை அளவிடுவதற்கு மிகச் சிறந்ததாக அமையும். எனினும், கூடையில் அனைத்து நாடுகளும் கிடைக்கத்தக்கதாக இல்லாமை மற்றும் தயாரிப்பிலான வேறுபாடுகள் போன்ற நடைமுறைக் காரணங்களால் நுகர்வோர் விலைச்சுட்டெண் உதாசெவீதச் சுட்டெண்ணைக் கவனிப்பதற்கான பிரதிநிதியாக பயன்படுத்தப்படுகிறது. அனைத்து நாடுகளிலிருந்தான நுகர்வோர் விலைச் சுட்டெண்களைப் பெறுவதிலான காலதாமதம் இருக்குமிடத்து உதாசெவீதச் சுட்டெண் எட்டு வார கால தாமதத்துடன் வெளியிடப்பட்ட உண்மைத் தரவை அடிப்படையாகக் கொண்டது. நேரம் பிந்தாத தகவலை உறுதிப்படுத்தும் பொருட்டு பெசெதாவீ மற்றும் உசெதாவீதச் சுட்டெண்கள் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. புதிதாகக் கணிக்கப்பட்ட பெதாசெவீ மற்றும் உதாசெவீ சுட்டெண்களும் அட்டவணை 5.13 இலும் புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 87 இலும் வெளியிடப்பட்டுள்ளன.

பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களின் பெயரளவிலான உயர் பெறுமதி உயர்வு மற்றும் சார்பு ரீதியிலான உயர் உள்நாட்டுப் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் ரூபாவின் 5 நாணய மற்றும் 24 - நாணயக் கூடைகளின் அடிப்படையில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 2010 இல் முறையே 7.4 சதவீதத்தாலும் 5.4 சதவீதத்தாலும் பெறுமதியில் உயர்வடைந்திருந்தது.

## உள்நாட்டிலுள்ள வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு செலாவணி சந்தை 2010இல் விரிவடைந்த போதிலும் இவ்வாண்டில் வெளிநாட்டுத் துறையிலான அபிவிருத்திகள் உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு செலாவணி சந்தை செயற்பாடுகள் மீது கலப்பான தாக்கத்தைக் கொண்டிருந்தது.** வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள விரிவாக்கத்தைக் கவனத்திற் கொள்கையில் ஏற்றுமதி பெறுகைகளிலிருந்து உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு சந்தைக்குள்ளான உறுதியான உட்பாய்ச்சல்கள், அதிகரித்ததொழிலாளர் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்கள், செலாவணி வீதத்திலான உறுதிப்பாடு காரணமாக உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2009இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ. டொலர் 6,335 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ. டொலர் 7,416 மில்லியனுக்கு (மொத்தகொடுக்கல் வாங்கல்களின் 67 சதவீதம்) அதிகரித்தது. எனினும், முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2009இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,624 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 3,649 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்ததன் மூலம் உடன் சந்தையில் அவதானிக்கப்பட்ட போக்கிலிருந்து விலகிக் காணப்பட்டது. இதன்படி, வங்கிகளுக்கிடையேயான மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2009இன் ஐ.அ.டொலர் 10,959 மில்லியனிலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 11, 065 மில்லியனுக்கு சிறிதளவால் மட்டுமே அதிகரித்தது.

வரைபடம் 5.14 வங்கிகளுக்கிடையிலான காலாண்டு ரீதியான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள்




**ஒரு - மாதம், மூன்று - மாதம், ஆறு - மாதம் என்பவற்றுக்கான முன்னோக்கிய கட்டுப்பணம் 2010 முழுவதும் வட்டி வீத வேறுபாடுகளை விட சிறிது குறைவாக விளங்கியது.** இது குறுகிய காலத்தில் உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு செலாவணிச் சந்தையினுள் தொடர்ச்சியான எதிர்காலப் பாய்ச்சல்களின் சந்தை எதிர்பார்ப்புக்களை எடுத்துக்காட்டுகிறது. உள்நாட்டில் வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்களுக்கு மத்தியிலும் இது சார்பு ரீதியில் பன்னாட்டு அடித்தள அளவீட்டுக் குறியீட்டு வட்டி வீதங்களை விட உயர்ந்து காணப்பட்டமையால் உயர் வட்டி வீத வேறுபாடுகளை ஏற்படுத்தியது. உள்நாட்டுப் பொருளாதாரத்தில் அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கை உயர் வட்டி வீத வேறுபாடுகளுடன் இணைந்து உள்நாட்டு திறைசேரி உண்டியல் மற்றும் முறிச் சந்தைக்கு வெளிநாட்டு முதலீட்டைக் கவர்வதில் மேலும் உதவியளித்தன.